

# ஜீவ மன்னா

JESUS NEVER FAILS
DIVINE GOOD NEWS CENTER

அனுதினமும்

2014 நவம்பர்


38 வது வெளியீடு

"என் ஜனத்தை
ஆற்றுங்கள், தேற்றுங்கள்;
...என்று உங்கள் தேவன்
சொல்லுகிறார்." ஏசாயா 40:1,2




# அட்டைப்பட விளக்கம்


அன்பார்ந்தவர்களே! இம்முறை ஜீவ மன்னா 38வது வெளியீட்டின் அட்டைப் படத்தில் காணப்படுவது. எங்கள் இலங்கை சகோதர, சகோதரிகளே. உலகில் பிரச்சினைகள், உபத்திரவங்கள், துன்பங்கள், நோய்கள் காரணமாக வேதனைக்குள்ளாகியிருக்கும் திரளான ஜனங்கள் இப்படியாகக் கூடியிருப்பது அவர்கள் வாழ்க்கை பிரச்சினைகளுக்கு பதில் பெற்றுக் கொள்ளும்படியாகும். அலையலையாய் திரண்டு வரும் இந்த இலங்கை வாழ் ஜனங்களுக்கு நயகரா நீர்வீழ்ச்சி போன்று இயேசுகிறிஸ்துவின் கருணை ஒவ்வொரு சனிக்கிழமையும் அவர்களை நோக்கி அணை கடந்த வெள்ளமாக பெருகிக் கொண்டிருக்கின்றது.



ஆனாலும் எனது அன்பான தேவ பிள்ளைகளே! இந்த தேவ வீட்டில் கூடியிருக்கும் இந்தத் திரளான ஜனங்களைக் கண்டு இயேசுகிறிஸ்து ஒரு போதும் திருப்தியடைய மாட்டார் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் பரிசுத்த வேதாகமத்தில் பரிசுத்த யோவான் 10:16இல் இந்தத் தொழுவத்திலுள்ளவைகளிலல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு. அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும். அவைகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கும். அப்பொழுது ஒரே மந்தையும், ஒரே மேய்ப்பனுமாகும் என்று தேவன் கூறுகின்றார். ஆகையால் சபையில் தேவ ஜனங்கள் சிறுதளவிலோ, பெருமளவிலோ ஒன்று கூடுவதைக் குறித்து நாம் மகிழ்ச்சியடைய முடியாது. ஏனென்றால் தேவனுடைய தொழுவத்திற்குச் சொந்தமான இன்னும் அநேக ஆடுகள் வெளியில் இருப்பதாக இயேசுகிறிஸ்து உள்ளத்தில் பெருஞ் சுமையோடு குறிப்பிடப்பட்டிருக்கின்றார் அல்லவா?

அதைத் தவிர பரி.மத்தேயு 9:36இல் தேவன் திரளான ஜனங்களைக் கண்ட பொழுது அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலத் தொய்ந்து போனவர்களும், சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால் அவர்கள் மேல் மனதுருகினார். இன்னுமாக பரி.மத்தேயு 18:12இல் குறிப்பிட்டுள்ளவாறு ஒரு மனுஷனுக்கு 100 ஆடுகளிருக்க அவைகளில் ஒன்று சிதறிப் போனால் அவன் மற்ற தொண்ணூற்றொன்பது ஆடுகளையும், மலைகளில் விட்டுப் போய்ச் சிதறிப் போனதைத் தேடியதைப் போன்று தேவன் எருசலேம், பெதஸ்தா குளத்திற்கருகாமையில் பலவீனத்தின் ஆவி ஆட்கொண்டிருந்த மனிதனைத் தேடிப் போனார். பரி.யோவான் 5:1-9 இல் அப்படியே கதரேனருடைய நாட்டில் அசுத்த ஆவியில் அலைக்கழிக்கப்பட்டுக் கொணடிருந்த லேகியோனைத் தேடிப் போனார். (பரி.மாற்கு 5:1.20)





துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? என மனிதன் மனம் திரும்புவதை எதிர்பார்க்கும் தேவன் (எசேக்கியேல் 18:23) இன்னுமாக இதோ எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள் என்றும் (எசேக்கியேல் 18:4) இல் தேவன் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள் (எரேமியா 30:22) என எங்களை அழைக்கிறார். உலகம் முழுவதும் சுமார் 700 கோடி ஜனங்களுள் இலங்கையில் மாத்திரம் சுமார் 2 கோடியே 3 இலட்சம் ஜனங்கள் தேவனுடைய தொழுவத்திற்குச் சொந்தமானவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் அவர்களை இயேசுகிறிஸ்துவிடம் கொண்டு வர வேண்டிய பொறுப்பை உங்களுக்கும் எனக்கும் அளித்திருக்கிறார். முதன் முதலாக எனக்காகப் போவது யார்? என்று தேவன் உங்களைப் பார்த்து கேட்கிறார்.

**நீங்கள் பெற்றிருக்கும் பெறுமதிமிக்க இவ் வாழ்வில் நீங்கள் இயேசுகிறிஸ்துவுடன் இணைந்து ஆத்மீக இரட்சிப்புக்காக ஆத்மீக பாரத்தோடு செயல்படுங்கள். இயேசு துணை!**

**ஆவிக்குரிய செய்தி**
**போதகர் ஏ.ஜே.ஜோசப்**

**மகிமை** பரிசுத்த ஆவியானவராகிய தேவனுக்கே



# ஆசிரியர் உரை

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே!

## ஆத்மீக வாழ்வில் வெற்றி பெறுங்கள்!

ஜீவ மன்னா தின மஞ்சரியின் 38வது வெளியீடுகள் மிகவும் எளிய சொற்றொடர்களில் பூரணப்படுத்தி உங்கள் கரங்களில் கிடைக்கும்படியாக தேவன் கொடுத்த அநுக்கிரகமோ பெரிதென்பதால் முதன் முதலாக தேவனையே முழு மனதோடு ஸ்தோத்தரிக்கிறேன். இந்த தின மஞ்சரியில் அனைத்து நாட்களிலும் உங்கள் ஆத்மீக வாழ்க்கைக்கு மிகவும் பிரயோஜனமானவைகளை எழுதுவதற்கு தேவன் தாமே பரத்திலிருந்து கொடுத்த வெளிபாடுகளுக்காகவும் தேவனுக்கே சகல துதி கனம் மகிமை உரித்தாகட்டும்.

கடந்த ஜீவ மன்னா தினதியானங்களில் அட்டைப்பட விளக்கத்தில் ட்யடெனிக் கப்பலைக் குறித்து எழுதி, அப்போஸ்தலர் நடபடிகளில் 27:9-44 வசனங்களில் பவுல் அடியாரின் ஊழிய யாத்திரையை சம்பந்தப்படுத்தி எழுதியிருந்தேன். அந்த வசனங்கள் உங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கு பிரயோஜனமானவைகளாக இருந்ததென்பதை பெரும்பாலோரின் விமர்சனக் கடிதங்களுக்கூடாகக் கண்டறிந்தேன். அப்படியாக எனக்கு எழுத வெளிபாடுகள் தந்தது தேவனாகிய இயேசுகிறிஸ்து என்பதால் அவைகள் உங்களுக்கு புத்துணர்ச்சியையும், புதிய அபிஷேகத்தையும் கொடுப்பதாக! எல்லா மகிமையும், துதிகளும் தேவனுக்கே உரித்தாகட்டும்.

தேவ பிள்ளைகளே! வாசகர்களான உங்களில் சில பேர் வாசகக் கட்டணங்களின் மூலம், அவ்வாறே சில தேவ பிள்ளைகள் அவர்களது சந்தோஷக் காணிக்கைகள் மூலமும் இந்த ஜீவ மன்னா தின மஞ்சரியை தயாரித்து வெளியிட உறுதுணை புரிந்தபடியால் உளமார்ந்த நன்றிகள். ஆனாலும் சிலர் இதைக் குறித்து சுலபமாக நினைத்து செயல்படுவது மிகவும் வேதனைக்குரியதாகும். எப்படியாகிலும் புதிய சகோதர, சகோதரிகளுக்கு இப்புத்தகத்தை அறிமுகப்படுத்துவது இன்னுமொரு ஆவிக்குரிய பிள்ளைகளுக்கே உரித்தான பாரிய கடமையாக இருக்கின்றதென்பதை சிந்தித்து செயற்படுமாறும் எதிர் வரும் காலங்களில் இடை நிறுத்தாது தொடர்ந்து வெளியீடுகளைத் தயாரித்து உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு தேவையான ஆத்மீக போஷனை கொடுப்பதற்கு எங்களுக்கு முடியுமான அளவில் உங்கள் உன்னத ஒத்தாசையை நல்கி கைகோர்த்து எம்மோடிணைந்துக் கொள்ளுமாறு உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு எனது சபை ஊழியங்களுக்காகவும், உங்கள் ஜெபங்களில் ஜெபித்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறேன். வெற்றிகரமான ஆத்மீக வாழ்க்கைக்காக வாழ்த்துகின்றேன்.

*சுமை சுமந்து சோர்ந்திருப்போர்*
*சுமை தாங்கி இயேசு இருக்கிறார்*
*சுமைகள் இப்பூமிக்கு உரியதென்கிறார்*
*சுமைகளின்றி வருக என அழைக்கிறார்*

இப்படிக்கு
**இயேசு கிறிஸ்துவுக்குள்**
போதகர் ஏ.ஜே.ஜோசப்
***இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம்***

**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

# இயேசுவின் அற்புத கிரியைகள்

## 40 வருட புகைப்பிடி பழக்கத்திலிருந்தும், 2 வருட கைவலியினின்றும் விடுதலை !



I. D. ரத்னபால
கரன்தெனிய

40 வருட புகைப்பிடி பழக்கத்திலிருந்த நான் அதிலிருந்து மீள முடியாதிருந்தேன். 2014ல் மார்ச் மாதம் 01ம் திகதி இயேசு கைவிடார் சுவிஷேச பணியகத்தில் சுகமளிக்கும் ஆராதனையில் பங்குபற்றினேன். அங்கு அன்றைய நாளில் நோய்கள் சுகமடைந்ததையும், அசுத்த ஆவிகளால் ஜனங்கள் அலைக்கழிக்கப்பட்டு விடுதலையடைந்ததையும் கண்டு ஆச்சரியப்பட்டேன். அதன் பின்பு நானும் ''இயேசுவே எனக்கு இந்த புகைப்பிடி பழக்கத்திலிருந்து விடுதலைப் பெற உதவி செய்யுங்கள்''என்று ஜெபித்தேன் அற்புதமான முறையில் இயேசுவினால் தொடப்பட்டு 40 வருட புகைப்பிடி பழக்கித்தினின்று விடுதலை பெற்றேன். அத்தோடு ''புகைப்பிடித்தல் எனக்கு கசப்பான காடியாக மாறியதோடு புகைப்பிடிப்பவர்களுக்கருகில் நிற்கக் கூட முடியாமற் போய் விட்டது.''

இன்னுமாக சுமார் இரண்டு வருட காலமாக எனது இடது கை தோள் தொடங்கி கை விரல்கள் வரை ஒரு வேதனை இருந்தது. இது சம்பந்தமாக ஆயுர்வேத, ஆங்கில வைத்திய பரிகாரம் செய்ததோடு அதற்காக 10,000 ரூபா அளவில் செலவானது ஆனால் சுகங் கிடைக்கவில்லை. ஆனால் சுகமளிக்கும் ஆராதனையில் கலந்துக் கொண்ட மூன்றாவது நாளில் மின்சாரம் கையில் பட்டதைப் போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டது. அக்கணமே நான் சுகமானேன்.

40 வருட புகைப்பிடித்தலின்றும் 2 வருட கைவலியினின்றும் சுகப்படுத்திய இயேசுவுக்கே மகிமை உண்டாவதாக!

## இரத்தப் புற்று நோய் பூரண சுகம் !



P. L. சந்திரலதா
பொல்லாகல

எனக்கு ஒரு வருடக் காலமாக வயிற்றில் வலது பக்கம் கட்டியொன்று உருவாகியிருந்தது. என் வயிறு ஊதியிருந்ததோடு கட்டி வயிற்றுனுள் எல்லா வேளையிலும் மேலேயும், கீழேயும் போவதை உணர்ந்து கொள்ள முடிந்தது. வைத்திய பரிசீலனை செய்துக் கொண்ட வேளையில் எனக்கு ''இரத்தப் புற்று நோய்'' இருப்பது வெளியானது. அதன் பிறகு மீண்டும் ஒரு வருடம் மூன்றுமாத மளவில் மஹரகம புற்று நோய் வைத்தியசாலையில் பரிகாரம் பெற்றுக் கொண்டதோடு ஒரு மாதத்திற்குள் மருந்து மாத்திரைகள் 120 குடிக்க நேர்ந்தது. 15 இலட்சத்திற்கு மேலாக அதிக விலையுயர்ந்த மருந்துகள் அரசாங்கத்தின் மூலம் கிடைத்தது.

வைத்திய பரிகாரத்தின் போது சரீர பலவீனங்கள் உணவுகள் பேரில் பிரியமின்மை மயக்கமான நிலை எந்நேரமும் இருந்துக் கொண்டேயிருந்தது.

இதற்கிடையில் இயேசுகைவிடார் தேவ சபையில் சனிக்கிழமை சுகமளிக்கும் ஆராதனையில் 7 நாட்கள் பங்குபற்றினேன். அப்பொழுது விஷேட சுகத்தைப் பெற்றுக் கொண்டதோடு மாத்திரைகள் உட்கொள்வதையும் நிறுத்தி விட்டேன். 2014 ஏப்ரல் 17ம் திகதி வைத்தியப் பரிசீலனையின் போது எனது''இரத்தப் புற்றுநோய்'' சம்பூரணமாக குணமடைந்து விட்டதெனக் கூறினார்கள்.

இரண்டு வருடக்காலமாக இருந்த பயங்கர புற்று நோயினின்று சுகப்படுத்திய ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவுக்கு முழு உள்ளத்தோடு நன்றி கூறுகின்றேன்!

| ஜீவ மன்னா | பரலோகப் பிதாவின் சித்தத்தின்படி செய்பவனே பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பான் ! | இன்றைய வேதவாசிப்பு |
|---|---|---|
| நவம்பர் 01 சனி | | ரோமர் அதி: 11 – 12 |

**"பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்;..."** (பரி.லூக்கா 16:22)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாள் மாதத்தின் முதல் நாளாக இருக்கின்றபடியால் **இம்மாதம் முழுவதும் அதிசயமான காரியங்களை வாய்க்கப்பண்ணும் கர்த்தர் எம்மோடிருந்து வழி நடத்துமாறு ஜீவனுள்ள இயேசுவின் வல்லமையான நாமத்தில் வாழ்த்துகின்றேன்.** நீங்கள் ஜீவிக்கின்ற இயேசுவைக் குறித்தறிந்து கொண்டீர்களா? அவர் யெகோவா-நிஸ்சிவாகிய தேவன் என்பதால் இன்றைய நாளில் நீங்கள் முகம் கொடுக்க வேண்டிய அனைத்து **பிரச்சினைகள், சவால்கள், உபத்திரவங்கள் என்பவைகளில் உங்களுக்கு வெற்றியளிப்பாராக!**

தேவ பிள்ளைகளே! பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ள தேவ இராஜ்யத்தைக் குறித்த **அனைத்து வசனங்களும் இன்றும் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன.** ஏனெனில் தேவ வசனங்களில் குறிப்பிட்படுகின்ற இருள் இராஜ்யத்தின் செயல்களும் அவ்வண்ணமே நிகழ்கின்றன என்பதை நன்கு அறிகின்றோம். ஆகையால் **பரிசுத்த ஆவியானவருக்கூடாக தேவ வசனத்தைக் குறித்து அறிவைப் பெறுகின்ற தேவ பிள்ளைகளான நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.** அது மாத்திரமின்றி இரட்சகர் இயேசுகிறிஸ்துவினால் மறுபிறப்படைந்தவர்களாய் இருப்பதனால் நீங்கள் பரலோக இராஜ்யத்திற்கு தகுதியுள்ளவர்கள். ஏனெனில் "இயேசு ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என **யோவான் 3:5**இல் கூறுகின்றார். **லூக்கா 16:22**இல் கூறப்படுகின்றதாவது "அந்த தரித்திரன் மரித்து தேவ தூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டு போய் விடப்பட்டான்" என்றாகும்.

தேவ பிள்ளைகளே! சரீரம் முழுவதும் பருக்கள் நிறைந்தவனாய் காணப்பட்ட லாசரஸ் எனும் தரித்திரன் மரித்து பாராதீசுக்கு கொண்டு போகப்பட்டது எதனாலே? தினமும் சுகபோத்துடன் வாழ்ந்து கொண்டிருந்த ஐச்வரியவானான மனிதன் மரித்து பாதாளத்திற்கு அனுப்பப்பட்டு அக்கினி ஜூவாலையில் வேதனைப்பட்டான். அப்படியாக நடந்தது இரண்டு பேர்களினதும் கிரியைகளினாலேயாகும். **புண்களினால் வேதனையுடன் வாசல்படியில் இருந்த லாசருவை ஐசுவரியவான் ஏறெடுத்தும் பார்க்கவில்லையென வேதாகமத்தில் குறிப்பிட்பட்டுள்ளது.** ஒரு வேளை உணவு கூட கொடுக்காதபடி அவன் செய்த தீமையான காரியங்கள் காரணமாக தேவனின் இரக்கம் அவனுக்கு கிடைக்காதபடி **நரகாக்கினிக்கு தள்ளப்பட்டான்.** ஏழையான லாசரஸ் மரித்து ஆபிரகாமின் மடியில் இருப்பதை ஐசுவரியவான் கண்டான். லாசருக்கு தேவனின் இரக்கம் கிடைத்தது. **ஏழைகளை முழு உள்ளத்தோடு உபசரியுங்கள்.** தேவனின் இரக்கத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். **இன்று வெற்றிகரமான நாள!**

**ஜெபம்**

என் தேவனே! என்னை உங்கள் பரலோக இராஜ்யத்திற்கு உரிமையான பிள்ளையாக்கிக் கொண்டமையால் ஸ்தோத்திரம். நான் அதில் திருப்தியடையாதபடி எப்போதும் நன்மையான காரியங்களை செய்ய உபகாரம் செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"இயேசு அவர்களை நோக்கி: ஒரே கிரியையைச் செய்தேன், அதைக்குறித்து எல்லாரும் ஆச்சரியப்படுகிறீர்கள்." (பரி.மத்தேயு 7:21)

ஜீவ மன்னா
நவம்பர் 02
ஞாயிறு

## ஆடுகள் மேல் இரக்கம் கொள்ளும் நல்ல மேய்ப்பன் !

இன்றைய வேதவாசிப்பு
ரோமர் அதி: 13 – 14

**"அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி,"** (பரி.மத்தேயு 9:36)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் **இன்றைய நாள் நன்மையான நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** இரண்டு கோடியே மூன்று இலட்சமானளவிலான இலங்கை வாழ் மக்களிடையே ஜீவிக்கின்ற தேவனாக, அருபியாக பரலோக தேவனைக் குறித்து அறிந்துக் கொள்ள **வரப்பிரசாதம் பெற்ற நீங்கள் அதிவிஷேசித்தவர்களாவீர்கள்.** இன்னுமாக நீங்கள் பெற்றுக் கொண்ட **தேவனது விஷேடமான கருணையைக் குறித்து உங்கள் முழு உள்ளத்தோடு நன்றி செலுத்துவது உங்கள் கடமையாகும்.**

தேவ பிள்ளைகளே! உலகில் வாழ்கின்ற பெரும்பாலான மனிதர்கள் வாழ்வில் **அகால மரணங்கள் ஏற்படுவதை நாங்கள் கேள்விப்பட்டுள்ளோம். அப்படியான நிகழ்வுகளை தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கூடாக காணக்கூடியதாகவுள்ளது.** அவர்களை நம்மோடு ஒப்பிட்டு பார்க்கையில் **நாம் அதிர்ஷ்டக்காரர்கள்!** என உங்களுக்கும் தோன்றுகிறதா? நீங்கள் சிருஷ்டிப்பின் தேவ பிதாவைக் குறித்து தெரிந்துக் கொண்டமையால் உங்களுக்கு **விஷேட பாதுகாப்பு கிடைத்துள்ளது.** ஆனாலும் உலகத்தவர்களுக்கு அப்படியான பாதுகாப்பு கிடையாது. ஆகையால் மேலே கூறப்பட்ட **பரி.மத்தேயு 9:36**இல் "இயேசுகிறிஸ்து தம்மண்டையில் இருந்த திரளான ஜனங்களைக் கண்ட பொழுது அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலத் தொய்ந்து போனவர்களும், சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால் அவர்கள் மேல் மனதுருக்கம் கொண்டார்." தேவன் அவ்வண்ணமே **தேவனண்டையில் வருகின்ற அனைத்து மனிதர்கள் பேரிலும் இரக்கம் கொள்கின்றார்.**

தேவ பிள்ளைகளே! சிருஷ்டிப்பின் தேவ பிதாவானவரின் குமாரனான இயேசுகிறிஸ்துவாக மனிதர்களுக்கு தன்னை வெளிப்படுத்தினார். தேவன் படைத்த மனிதர்கள் நோய்கள் காரணமாகவும், வாழ்வில் பிரச்சினை, உபத்திரவங்கள் காரணமாகவும், சாத்தானின் கட்டுகளின் காரணமாகவும், இன்றும் மனிதர்கள் நெருக்கப்பட்டு துக்கப்படுகின்றதை தேவன் காண்பதனால், **மனிதர்கள் மேல் இரக்கங் கொண்டு அவர்களின் மேய்ப்பனாக அவர்களை அவைகளிலிருந்து மீட்டுக்கொள்ள தேவன் இன்றும் இயேசு-கிறிஸ்துவுக்கூடாக கிரியை செய்து கொண்டிருக்கிறார்.** நீங்களும் இன்று இவ்வண்ணமாக வாழ்வில் பிரச்சினைகளுக்கு தீர்வின்றி வாழ்வைக் குறித்து குழப்பத்தோடு, இப்பொழுது நான் வாழ்வதனால் எவ்வித பலனுமில்லை என்று நினைத்துக் கொண்டிருப்பீர்களெனின் **நீங்கள் இயேசுவண்டை மனந்திரும்பி வாருங்கள்.** தேவன் உங்களை மீட்டுக் கொள்வார். **வெற்றிச் சிறந்த நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! நீங்கள் இவ்வுலகில் நெருக்கப்படுகின்ற மனிதர்களுக்கு இரக்கம் கொண்டு வாழ்வளிக்கின்ற தேவன் என்பதால் நான் உங்களண்டை வருகிறேன். நீங்கள் எனக்கு இரக்கம் காட்டி ஆசீர்வதியுங்கள். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்;..." (பரி.யோவான் 10:14,15)

ஜீவ மன்னா
நவம்பர் 03
திங்கள்

**உலகத்தால் நீங்கள் கறைபடாதபடிக்கு உங்களைக் காத்துக் கொள்ளுங்கள் !**

இன்றைய வேதவாசிப்பு
ரோமர் .
அதி: 15 – 16

**"திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது."** (யாக்கோபு 1:27)

அன்பான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் **இன்றைய நாளும் உங்களுக்கு அருமையான புத்தம் புது கிருபையால் நிறைந்த நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** எங்கள் பிதாவாகிய தேவன் ஒருவரே ஜீவிக்கின்ற தேவனாகையால் அவர் வானத்தையும், பூமியையும் படைத்து அங்கே காணப்படுகின்ற அனைத்தையும் படைத்து நிர்வாகம் பண்ணும் **சர்வ பராக்கிரம தேவனாக இருக்கின்றபடியால்,** நாங்கள் அவர் பேரில் மிகவும் பக்தி வைராக்கியமுள்ளவர்களாக வாழ வேண்டியது எங்களுக்குரித்தான கடமையாகும். மேற்கூறப்பட்ட **யாக்கோபு 1:27**இல் இன்று எங்களுக்கு கூறுவதாவது நாங்கள் பிதாவாகிய தேவனுக்கு முன்பாக "மாசில்லாத சுத்தமான பக்தியோடு வாழ வேண்டும் என்பதையே ஆகும்."

தேவ பிள்ளைகளே! தேவன் முன்னிலையில் கறைபடாத பரிசுத்த பக்தியெனின் "தாய் தந்தையற்ற, திக்கற்ற பிள்ளைகளையும், விதவைகளையும், உபத்திரவங்களில் அவர்களை விசாரிக்கிறதும் உலகத்தில் கறைபடாதபடி தன்னைக் காத்துக் கொள்ளுதலுமேயாகும்." என **யாக்கோபு 1:27**இல் கூறப்பட்டுள்ளது. அங்கு விஷேசமாக கூறப்படுகின்றதாவது, **உலகத்தில் கறைபடாதபடி உங்களைக் காத்துக் கொள்ளல் அவசியம் என்றாகும்.** ஆகையால் நீங்கள் தேவ பிதாவின் முன்னிலையில் **உண்மையான பக்தியுள்ள பெண்ணாக, உண்மையாகவே பக்தியுள்ள ஆணாக உங்களை நீங்கள் காத்துக் கொள்ளல் வேண்டும்.** ஆனாலும் நான் என்னை பாதுகாத்துக் கொள்வது எப்படி என உங்களுக்கு எண்ணத் தோன்றுகிறதா? ஆனாலும் உள்ளம் கலங்காதிருங்கள்! தேவ வசனம் கூறுகிறது. நாம் அனைவரும் அசுத்தமானவர்களாக இருக்கின்றோம். **எங்கள் நீதியானது அழுக்கான வஸ்திரத்தைப் போல காணப்படுகின்றது என்றாகும்.**

தேவ பிள்ளைகளே! அப்படியாக இருந்த எம்மை தேவ பிதாவானவர் தம்மண்டையில் எம்மை அழைத்து கொண்டு அவரது மகனான இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் எம்மைக் கழுவி பரிசுத்தப்படுத்தி எமது அழுக்கு வஸ்திரத்தை அகற்றி **புதிதான வஸ்திரம் அதாவது இரட்சிப்பு என்னும் வஸ்திரத்தை எமக்கு அணிவித்தார்.** ஒரு முறை உங்களை பரிசுத்தப்படுத்திய தேவன் மீண்டுமாக நீங்கள் அசுத்தமாகி கறைபடாதபடி உங்களை பாதுகாத்துக் கொள்ள உங்களது எல்லா வழிகளிலும் துணை புரிவாராக! நீங்கள் **உலக ஆசை இச்சைகளுக்கு பின்னே செல்லாதபடி இயேசுகிறிஸ்து உங்கள் ஆவியை பெலப்படுத்துவாராக!** இன்றும் இயேசுகிறிஸ்து உங்களோடு இருப்பாராக! **இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்கள் முன்னிலையில் உண்மையான பக்தியுள்ளவனாக வாழ மிகவும் பிரியமாக இருக்கின்றேன். உலகத்தில் நான் கறைபடாதபடி என்னைக் காத்துக் கொள்ள நீங்கள் உபகாரம் செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே." (1 பேதுரு 1:23)

ஜீவ மன்னா
நவம்பர் 04
செவ்வாய்

# பூமியுள்ளவைகளை அல்ல ! மேலானவைகளைத் தேடுங்கள் !

இன்றைய வேதவாசிப்பு
1 கொரிந்தியர் அதி: 01 – 02

**"இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்."** (1 கொரிந்தியர் 15:19)

அருமையான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற நம் இயேசுவின் வல்லமையான நாமத்தினால் இதமான காலைப் பொழுதினிலே **இன்றைய நாளில் இனிதே வாழ்ந்திடும்படியாக வாழ்த்துகின்றேன்.** ஆத்மீக தேவ பிள்ளைகளான நாங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையைப் போலவே இவ்வுலக பூமிக்குரிய வாழ்க்கையையும் வாழ்கின்றோம். ஏனென்றால் நாங்கள் **தேவனின் உரிமையைப் பெற்ற சொந்த பிள்ளைகளாக இருப்பதனால் பரலோக இராஜ்யத்திற்கு உரிமை பெற்றுள்ளோம்.** எனினும் இன்னும் நாம் இப்பூலோகத்தில் ஜீவிக்கின்றபடியால் **நாம் ஆத்மீகர்களைப் போலவே பூமிக்குரிய வாழ்வையும் வாழ்கின்றோம்.**

தேவ பிள்ளைகளே! ஆனாலும் உலக வாழ் மனிதர்களைப் போன்று நாங்கள் இவ்வுலக வாழ்வைக் குறித்து மாத்திரம் உள்ளத்தை ஈடுபடுத்தி அதன் பின்னாலே ஓடுவது முடியாததொன்றாகும். ஏனெனில் இயேசுகிறிஸ்துவினால் நாம் ஒவ்வொருவரும் பரலோக தேவ பிதாவின் சொந்த பிள்ளைகளாதலால் எங்கள் வாழ்க்கையைக் குறித்தும், எங்களுக்குள் இருக்கும் ஆத்துமாவைக் குறித்தும், எங்கள் மரணத்தின் பின்னர் **எங்களுக்கு உரிமையாகப் போகின்ற பரலோக இராஜ்யத்தைக் குறித்தும் எங்கள் உள்ளம் ஈடுபாடு கொள்ளவும், சிந்திக்கவும் வேண்டியவர்களாயுள்ளோம்.** மேலே கூறப்பட்டுள்ள வேதாகம வசனமானது **இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாய் இருப்போம்** எனக் கூறுகிறது.

தேவ பிள்ளைகளே! உலகில் பாவியாக வாழ்ந்த உங்களை பாவத்தில் மீட்டு ஜீவ பாதையில் உங்களை அழைத்துக் கொண்டுச் சென்றது **பூமிக்குரிய ஆசீர்வாதங்களினால் உங்களை ஆசீர்வதித்து ஐசுவரியவனாக உங்களை மாற்ற மாத்திரம் அல்ல என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.** ஏனென்றால் உங்களுக்காக மரித்த இயேசுகிறிஸ்து பரலோகத்தில் உங்களுக்கென்று ஓரிடத்தை ஆயத்தப்படுத்தி, உங்களுக்கென்று **ஜீவ கிரீடத்தை ஆயத்தப்படுத்தி உங்களுக்கு அவைகளை சொந்தமாகக் கொடுக்க எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.** ஆகையால் நீங்களும் தேவனின் அளவில்லாத அன்பைக் குறித்து ஞாபகப்படுத்தி, தேவ இராஜ்யத்தைத் தேடி அவரை கிட்டி நெருங்கி சேர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் தேவனுக்கு பிரியமான ஆத்மீகர்களாக வாழ்வீர்களானால் உங்களுக்குத் தேவையான பூமிக்குரிய ஆசீர்வாதங்களாலும் உங்களை நிறைத்திடுவார். தேவ வசனம் **பரி.மத்தேயு 6:33**இல் தேவ வசனத்தில் "முதலாவதாக தேவனுடைய இராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்." என்று கூறப்படுகிறது. நாம் தேவனுடைய இராஜ்யத்திற்கான காரியங்களில் இவ்வுலகில் தீவிரமாக அர்ப்பணித்து செயற்படுத்தும் போது தேவன் இவ்வுலகில் எம்மை ஆசீர்வதிப்பதும் உறுதியாகும். **இன்று ஆசீர்வாதமான நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! உங்கள் மகனான இயேசுகிறிஸ்து மூலமாக நீங்கள் என்னை பரலோக இராஜ்யத்திற்கு உரிமையுடையவராக்கினீர்கள். ஆகையால் இவ்வுலகில் வாழ்வைக் குறித்து தேடாது உங்களைத் தேட எனக்கு தயை பண்ணியருளுங்கள் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்." (கொலோசெயர் 3:1)

ஜீவ மன்னா

நவம்பர் 05

புதன்

# மேன்மையான ஆலோசனைகளை பெற்றுத் தரும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

1 கொரிந்தியர் அதி: 03 – 04

**"...சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ள மகத்துவமும் வல்லமையுமுள்ள தேவனே, யோசனையிலே பெரியவரும், செயலிலே வல்லவருமாயிருக்கிறீர்;..."** (எரேமியா 32:18,19)

எனக்கருமையான தேவ ஜனங்களே! ஜீவனுள்ள **இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் புதிய கிருபையினால் நிறைந்த நல்ல நாளைப் பெற்று சமாதானத்துடன் வாழும்படியாக வாழ்த்துகின்றேன்.** மனிதர்களை சிருஷ்டித்த தேவன் அருபியாக இருக்கின்றாரா தேவனின் அளவற்ற அன்பைப் பெற்றுக் கொண்ட நீங்கள் அனைவரும் இலங்கை வாழ் ஜனங்களிடையே **ஆசீர்வாதம் பெற்றவர்கள்.** ஏனென்றால் தேவன் தனது சொந்த அபிப்பிராயத்தின்படி தனது பிள்ளைகளாக உலகில் வேறுபிரித்துக் கொண்ட உங்களைக் குறித்து ஒரு **பெரிய மேலான திட்டத்தை வைத்துள்ளார்.**

தேவ பிள்ளைகளே! உங்கள் பரலோக தேவ பிதாவானவர் உங்களோடு இருப்பதனால் தேவனின் மேன்மையான ஞானம், அறிவுத்திறன் என்பவைகளை உங்களுக்குத் தந்தருளுவார். அது மாத்திரமின்றி **தேவனின் உன்னத ஆலோசனையை உங்களுக்குக் கொடுத்து உங்கள் வாழ்க்கையில் செயற்படுத்தவும் வல்லவராயிருக்கிறார்.** தேவனின் ஆலோசனையை எப்படிப் பெற்றுக் கொள்ள முடியுமென சிந்திக்கின்றீர்களா? நீங்கள் சிறியவர்களாயிருக்கும் போது **உங்கள் தாய் தகப்பன், உங்களைக் குறித்து எவ்வளவாக தமது கவனத்தைச் செலுத்தியிருப்பார்கள் நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்.** அவர்கள் எப்போதும் உங்களையே கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொண்டிருந்ததை நீங்கள் அறிவீர்களா? நீங்கள் ஏதாவதொன்றைச் செய்ய முனையும் போது மகனே, மகளே! அதைச் செய்ய வேண்டாம். உங்களுக்கு அதைச் செய்ய முடியாது, நீங்கள் இன்னும் சிறுவராக இருக்கின்றீர்கள், என்று எத்தனை முறை கூறியிருப்பார்கள்? அப்படியாக உங்களைப் பாதுகாக்க பெற்றோர்கள் உங்களைக் குறித்து கண்ணுங் கருத்துமாக இருந்தது போல **சிருஷ்டிப்பின் தேவனானவர் உங்கள் பேரில் முழு அவதானத்தையும் செலுத்திய வண்ணமாக இருக்கிறார்.**

தேவ பிள்ளைகளே! தேவனானவர், தேவ ஆவியானவராக உங்கள் உள்ளத்தில் வாசம் பண்ணுகிறார். தேவ ஆவியானவருக்கூடாக தேவன் உங்கள் உள்ளதிற்கு எண்ணங்களைக் கொடுத்து உங்களை பிரச்சினைகளிலிருந்தும் **ஆபத்து அணுகும் போதும் உங்களைக் காத்து மீட்டுக் கொள்வார்.** அவ்வண்ணமே வாழ்வின் முன்னேற்றத்திற்காக நீங்கள் முயற்சி செய்கின்ற போது உங்களின் நன்மை கருதி உங்களுக்கு எண்ணங்களைக் கொடுத்த மேன்மையான ஆலோசனைகளைக் கொடுத்து **அவை அனைத்தையும் வெற்றி பெறவும் செய்வார்.** இன்றும் தேவனின் ஆலோசனையின்படி செயற்பட்டு உங்கள் வாழ்வில் வெற்றி பெறுங்கள். யோசனையில் பெரியவரும், செயலிலே வல்லவருமான தேவன் உங்களை வழி நடத்துவாராக **ஜெயம் தரும் நாள்!**

**ஜெபம்**

என் தேவனே ! உங்கள் மேன்மையான ஆலோசனைகளை எனக்குத் தந்து என் வாழ்வில் வெற்றியை தந்தவர் நீர்! ஆகையால் ஸ்தோத்திரம் அதற்கு விரோதமாக கிரியை செய்யும் சாத்தானின் சேனைகளின் யோசனைகள் நிர்மூலமாகும்படியாக இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே." (எரேமியா 29:11)

ஜீவ மன்னா

நவம்பர் **06**
வியாழன்

# நீங்களும் தேவனின் பிள்ளையெனின் யூத வம்சத்தின் இரட்சிப்பைப் பெறுவீர்கள் !

இன்றைய வேதவாசிப்பு
1 கொரிந்தியர்
அதி: 05 – 06

**"யூதாவின் வம்சத்தாருக்கோ நான் இரக்கஞ்செய்வேன்; வில்லினாலும், பட்டயத்தினாலும், யுத்தத்தினாலும், குதிரைகளினாலும், குதிரைவீரரினாலும் நான் அவர்களை இரட்சியாமல், அவர்களுடைய தேவனாகிய கர்த்தராலே அவர்களை இரட்சிப்பேன் என்றார்."**
(ஓசியா 1:7)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! தேவனால் வேறுபிரிக்கப்பட்டவர்களே, **இயேசு எனும் ஜீவனுள்ள வல்லமையான நாமத்தில் எனது காலை வணக்கங்களுடன் வாழ்த்துகின்றேன்.** இன்றைய நாளிலும் நீங்கள் முகம் கொடுக்கும் அனைத்து சவால்களிலும், உங்களுக்கு ஜெயம் கிடைப்பதாக, **நீங்கள் விசுவாசித்தால் தேவ மகிமையைக் காண்பீர்கள்,** என்று எழுதப்பட்டுள்ள தேவ வசனத்தின்படி நான் உங்களை முழு உள்ளத்தோடும், விசுவாசத்தோடும் வாழ்த்தும் போது அது அப்படியே நிறைவேறும் என நீங்களும் **விசுவாசிப்பீர்களாயின் அது நிச்சயமாக நடைபெறும்.**

தேவ பிள்ளைகளே! தேவனாகிய கர்த்தர் அவரோடு கிட்டிச் சேர்ந்து வாழ்கின்ற ஜனங்களுக்கு இரக்கம் காட்டுகிறார் என இன்றைய தேவ செய்தியில் கூறப்பட்டுள்ளது. ஏனென்றால் விஷேசமாக **ஏசாயா 1:6**இல் தேவ வசனத்தில் கூறப்படுகிறதாவது ஏனெனில் நான் இனி இஸ்ரவேல் வம்சத்தாருக்கு இரக்கம் செய்வதில்லை. நான் அவர்களை முழுவதும் அகற்றி விடுவேன் என்பதாக கூறப்படுகின்றது. ஆனாலும் **ஓசியா 1:7**இல் தேவ வசனத்தில் கூறப்படுவதாவது, "யூதாவின் வம்சத்தாருக்கோ இரக்கம் செய்வேன். தேவனுடைய கர்த்தராலே அவர்களை இரட்சிப்பேன்" என்கிறார். தேவன் அவ்வாறாகக் கூறியது இஸ்ரவேல் **வம்சம் எப்போதும் கீழ்படியாது அநீதிகளை இழைத்தபடியினாலேயாகும்.** ஆனாலும் இஸ்ரவேலின் பனிரெண்டு கோத்திரங்களுள் யூதா வம்சம் மாத்திரம் தேவனோடு நெருங்கி கிட்டிச்சேர்ந்து ஜீவித்தபடியினால் தேவனின் கருணையைப் பெற்றுக் கொண்டார்கள்.

தேவ பிள்ளைகளே! நிகழ் காலத்தில் ஆத்மீக தேவ பிள்ளைகளான நாம் அன்று யூத வம்சம் போல் தேவனோடு நெருங்கி வாழ்வோமானால் யூத வம்சத்திற்கு இரக்கம் காட்டிய தேவன் எங்களுக்கும் இரக்கம் காட்டி எங்களை மீட்டுக்கொள்வார். எனது **30 வருட ஆத்மீக வாழ்வில் அநேக சந்தர்ப்பங்களில் பலவித உபத்திரவங்கள், சவால்கள் என்பனவற்றிற்கு முகம் கொடுக்க நேரிட்ட போதிலும் நான் தேவனை நெருங்கி ஜீவித்தபடியினால் அனைத்திலும் தேவன் எனக்கு உதவி என்னை மீட்டுக் கொண்டார்.** தேவனின் பிள்ளையான உங்களை தேவனுக்கு விரோதமாக செயற்பட வைக்க சாத்தான் எப்போதும் உங்களைத் தூண்டிக் கொண்டிருப்பான். ஆனாலும் **நீங்கள் ஜெபிக்கும் போது தேவன் உங்களுக்கு வெற்றியைக் கொடுப்பார். இன்று வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! அன்றைய யூதா வம்சத்தை போன்று நான் உங்களை நெருங்கி வாழ எனக்கு இரக்கம் பெற கிருபை செய்தருளுங்கள். அதற்கு விரோதமாக சாத்தான் கொண்டு வரும் அனைத்து தடைகளையும் நீங்கள் நிர்மூலமாக்குங்கள். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

**வேத வாக்குத்தத்தம்**

"தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்."
(சங்கீதம் 103:13)

ஜீவ மன்னா
நவம்பர் 07
வெள்ளி

# தம்முடைய தூதனை அனுப்பி சிங்கத்தின் வாயை கட்டும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
1 கொரிந்தியர் அதி: 07 – 08

**“...தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார்;...”** (தானியேல் 6:22)

பிரியமான தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவனாகிய **இயேசுகிறிஸ்துவின் வல்லமை நிறைந்த நாமத்தினால் சுகம், சந்தோஷம், சமாதானம் பெற்று இன்றைய நாளில் மகிழ்ந்திருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** உலகில் வாழ்கின்ற சுமார் 700 கோடி ஜனங்களின் மத்தியில் தேவன் எம்மைத் தெரிந்து நீங்கள் எனக்கு விலை மதிக்க முடியாத பொக்கிஷமாவீர்களென்றும், **நம் பாவங்களை கழுவி தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கினார்.** தேவன் எம்மைக் குறித்து சொல்லியிருப்பது யாதெனில், **தேவனால் வேறுபிரிக்கப்பட்ட நாம் ஒவ்வொருவரும் ஆசீர்வாதம் பெற்றவர்களே.**

தேவ பிள்ளைகளே! ஆத்மீக பிள்ளைகளான எமக்கு விரோதமாக எங்கள் “எதிராளியான சாத்தான் கெர்ச்சிக்கும் சிங்கத்தைப் போன்று எல்லா வேளையிலும் எங்களை விழுங்கலாமோ என்று வகைத்தேடிச் சுற்றி திரிகிறான்.” என **1பேதுரு 5:8**இல் வாசிக்கின்றோம். ஆனாலும் நீங்கள் கலங்காதிருங்கள்! உலகில் இருப்பவனை விட எங்களுக்குள் வாசம் பண்ணுபவர் வல்லமை மிக்கவர் என்பதால் **சாத்தானுக்கு விழுங்க தேவன் அனுமதி கொடுப்பாரோ?** என சிந்தித்துப் பாருங்கள். ஏனென்றால் நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாக தேவனுக்குள் நீதிமானாக பரிசுத்த வாழ்வு வாழ்வீர்களெனின் **சாத்தான் உங்களை அழிக்க இடம் கொடுத்து தேவன் ஒரு போதும் அமைதியாக இருக்கமாட்டார்.**

தேவ பிள்ளைகளே! தேவன் நல்லவர் என்பதைப் போன்று தேவனது அனைத்து கிரியைகளும் அனைத்து திட்டங்களும் மிகவும் நன்மையானவைகளாகும். தேவன் **ஏதேன் தோட்டத்தில் மனிதனுக்கு செய்த நல்லதொரு திட்டத்தை சாத்தான் அதற்கு விரோதமாக செயல் புரிந்து வீணாக்கினான்.** ஆகையால் விஷேடமாக தேவ பிள்ளைகளான உங்களுக்கும், எனக்கும் சாத்தான் விரோதியானவன். ஆனாலும் பயப்படாதீர்கள். தேவனை இடைவிடாது ஆராதித்து ஜெபித்து தானியேலை சிங்க குகைக்குள் போட்ட போது அங்கே **தேவன் தேவதூதனை அனுப்பி சிங்கத்தின் வாயைக் கட்டி தானியேலைக் காத்துக் கொண்டது போல** தேவன் இன்றும் உங்களை காத்து மீட்டுக் கொள்வார். நீங்கள் நீதிமானாக இருப்பின் அன்று தானியேலை விழுங்கலாமென எண்ணிக் கொண்டிருந்த சிங்கத்தைப் போன்று எதிராளியான சாத்தான் உங்களை விழுங்கலாமென வகை தேடிச் சுற்றி வருகையில் **தேவன் சாத்தானின் வாயைக் கட்டிப்போடுவார்.** உங்களைக் காப்பாற்ற தேவ தூதர்களுக்கு கட்டளையிடுவாராக! இன்றும் சதாகாலமும் ஜீவிக்கின்ற தேவன் உங்களோடிருப்பதனால் சாத்தான் முன்னிலையில் **நீங்கள் ஒரு போதும் தோல்வியடைய மாட்டீர்கள்.** தேவன் தடைகளை நீக்கி வெற்றியைப் பெற்றுத் தருவார். **வெற்றிகரமான நாளாகட்டும்**!

**ஜெபம்**

என் தேவனே! நீதிமானான தானியேலை நீங்கள் சிங்கத்தின் வாயைக் கட்டி காத்துக் கொண்டீர்கள். நான் நீதிமானாக வாழ முயற்சி செய்கின்றேன். என்னை விழுங்க வருகின்ற சாத்தானின் வாயை கட்டிப் போடுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

**“கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்.”** (சங்கீதம் 121:7)

ஜீவ மன்னா

நவம்பர் 08

சனி

# நம்மைக் காத்துக் கொள்ளும் நல்ல மேய்ப்பன் இயேசு !

இன்றைய வேதவாசிப்பு

1 கொரிந்தியர் அதி: 09 – 10

**"நான் அவர்களுடனே கூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்; நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக் கொண்டுவந்தேன்; வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை."** (பரி.யோவான் 17:12)

அன்பார்ந்த தேவ ஜனங்களே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாள் மிகவும் இனிமையான நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** மனிதனது வாழ்க்கையில் நிரந்தர எதிர்பார்ப்புகள் வைக்க முடியாத யுகத்தில் வாழ்கின்ற எம்மை பாதுகாத்து மிகக்கவனத்தோடு வழி நடத்தும் ஜீவிக்கின்ற இயேசுவைக் குறித்து எங்களுக்குத் தெரிந்துக் கொள்ளக் கிடைத்தமை **நாம் பெற்ற பெரிய பாக்கியமாகும்.** ஆகையால் இன்றைய நாளைக் குறித்து எவ்வித கவலையும் கொள்ளத் தேவையில்லை. ஏனென்றால் இன்றும் **தேவன் எங்களோடு ஜீவிக்கின்றவராக வாசம் பண்ணுகின்றார்.**

தேவ பிள்ளைகளே! மேற்குறிப்பிட்ட பிரதான தேவ வசனத்தில் எழுதப்பட்டுள்ளது. எங்கள் மீட்பராகிய இயேசுகிறிஸ்து பரலோகப் பிதாவை நோக்கி ஏறெடுத்த ஜெபமாகும். இயேசுகிறிஸ்து கூறுவதாவது "நான் அவர்களுடனே கூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக் கொண்டேன். நீர் தந்தவர்களைக் காத்துக் கொண்டு வந்தேன்" என்றாகும். **உங்கள் உள்ளம் கலங்காதிருக்கட்டும்**! தேவன் உங்கள் மேய்ப்பனாவார். பிதாவானவர் இயேசுகிறிஸ்துவின் மூலமாக ஆட்டுக்குட்டியாகிய உங்களைத் தம்மிடம் அழைத்துக் கொண்டார். ஆகையால் மகனான இயேசுகிறிஸ்து பிதாவானவருக்கூடாக எம்மைப் பெற்றுக் கொண்டமையால் **அவர் ஒரு போதும் எம்மை கைவிடமாட்டார்.** உங்களுக்கு எதிராக இருக்கின்ற யாரும் உங்களை அழிக்க முற்படும் போது அல்லது **அக்கிரமங்களுக்கும், உபத்திரவங்களுக்கும் இடம் கொடுக்காதபடி தேவன் உங்களை பாதுகாத்துக் கொள்வார்.** உங்களை மிக கவனமாக வாழ்க்கைப் பாதையில் முன்னோக்கிக் கொண்டுச் செல்வார். மூன்று வருடக் காலமாக நிர்மாணிக்கப்பட்ட **டய்டெனிக் கப்பலைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறீகள் அல்லவா?** மூன்று வருடக் காலமாக மிகவும் சிரமப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட அந்த உல்லாசப் பயணக் கப்பலானது அதன் முதன் மங்களகரமான உல்லாசப் பயணத்தின் போதே கடல் நடுவில் பனிப்பாறையின் மீது மோதி கடலில் மூழ்கியது.

தேவ பிள்ளைகளே! உங்கள் வாழ்க்கையெனும் கப்பலுக்குள் உங்கள் மீட்பராகிய இயேசுகிறிஸ்து வாசம் பண்ணுவாராகில் உங்கள் வாழ்க்கை ஒரு போதும் வீணாகிப் போகாது தேவன் **உங்கள் வாழ்க்கை வீணாகிப் போய் விடாதபடி சரியாக முன்னோக்கி கொண்டு செல்ல வழி காட்டுவார்.** "உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது" என்று **பரி:மத்தேயு 10:30**இல் கூறியிருக்கிறார். ஆகையால் நல்ல மேய்ப்பனான நமது இயேசுகிறிஸ்து உங்களோடிருப்பதை முழு உள்ளத்தோடு விசுவாசித்து தேவ வசனங்களைக் கடைப்பிடித்து அதன்படி வாழ்வை சரியான பாதையில் கொண்டு செல்லுங்கள். காலை **ஜெபமும் வேதாகம வாசிப்பும் அதிகாலையில் கட்டயமாகச் செய்ய வேண்டும்.** என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். **உங்களை வெற்றிச் சிறக்கப்பண்ணும் நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! நீங்கள் என்னை உங்கள் அண்டைக்கு அழைத்து என் வாழ்வை தேவனுக்குள் அர்ப்பணித்து உம்மோடு கூட என் வாழ்வு பாதையில் முன்னோக்கிச் செல்ல உதவிச் செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்." (பரி.யோவான் 10:9)

ஜீவ மன்னா

நவம்பர் 09

ஞாயிறு

## தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடி தேவ ஆசீர்வாதங்களைப் பெறுங்கள் !

இன்றைய வேதவாசிப்பு

1 கொரிந்தியர் அதி: 11 – 12

**"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்."** (பரி.மத்தேயு 6:33)

அருமையான தேவ ஜனங்களே! தம்மையே எமக்காக அர்ப்பணித்து, எம்மை உலகில் வேறுபிரித்துக் கொண்ட ***ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தினால் உங்களை வாழ்த்துகின்றேன்.*** எங்கள் சிருஷ்டிப்பின் தேவனின் உன்னதமான அழைப்பைப் பெற்று இலங்கையில் வாழ்கின்ற சுமார் இரண்டு கோடியே மூன்று இலட்சம் இலங்கை வாழ் மக்களின் மத்தியில் ***பரலோக இராஜ்யத்திற்குச் சொந்தமான பிள்ளைகளான நீங்களனைவரும் பாக்கியவான்களும் ஆசீர்வாதம் பெற்றவர்களுமாவீர்கள்.*** ஏனென்றால் யாக்கோபின் மகனான யோசேப்பைக் குறித்து "பார்வோன் தன் ஊழியக்காரரை நோக்கி தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப் போல வேறொருவன் உண்டோ? என்றான் "என **ஆதியாகமம் 41:38**இல் காண்கிறோம்.

தேவ பிள்ளைகளே! பெற்றோர் தமது பிள்ளைகளைக் குறித்து அநேக எதிர்பார்ப்புகளை வைத்துக் கொண்டுள்ளார்கள். ***அவர்கள் பெரியவர்களாகி வீட்டில் அனைத்து காரியங்களையும் பொறுப்பேற்று அழகாக செய்து முடிப்பார்கள் என அவர்கள் எண்ணுகிறார்கள்.*** அது மாத்திரமின்றி பெற்றோர்களது உள்ளத்திலிருக்கும் யோசனைகள், மற்றும் அவர்களது கொள்கைகளை பிள்ளைகளால் நிறைவேற்ற முடியுமா? என அவர்கள் நினைக்கிறார்கள். அப்படியானால் எங்களைத் தமது சொந்த பிள்ளைகளாக்கிக் கொண்ட பரலோகப் பிதாவானவர் அவரது இராஜ்யத்தைக் குறித்து ***நாங்கள் உத்தரவாதமுள்ளவர்களாக இருப்போமா? என நினைக்க மாட்டாரா?*** ஏனென்றால் உலகில் வாழ்கின்ற அனைத்து மனிதர்களும் தேவனைக் குறித்து அறிந்துக்கொண்டு அவர்கள் ஜீவனின் தேவ இராஜ்யத்திற்கு உரிமை பெற, நீங்களும் நானும் அவர்களுக்காக மத்தியஸ்தம் பண்ணி ஜெபிக்க வேண்டுமெனவும், அப்படியே அனைத்து மனிதர்களுக்கும் நற்செய்தி கூற வேண்டுமென்பதும், தேவ இராஜ்யத்தின் காரியங்கள் சம்பந்தமாக, எல்லா வழிகளிலும் எம்மால் முடிந்தளவு பங்கு கொள்ள வேண்டுமென்பதையும் தேவன் எம்மிடம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

தேவ பிள்ளைகளே! பிள்ளைகள் பெற்றோர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் போது பெற்றோர்கள் பிள்ளைகளை குறித்து ***மிகவும் சந்தோஷப்பட்டு முழு உள்ளத்தோடு அவர்களை ஆசீர்வதிப்பார்கள்.*** பெற்றோர்களிடமிருக்கும் நில உடமைகள், சொத்துக்கள், பணம் என்பவைகளை பிள்ளைகளுக்கு பொறுப்பளிப்பார்கள். எங்கள் சிருஷ்டிப்பின் தேவ பிதாவானவர் நாங்கள் தேவனது பிரியமான எதிர்பார்ப்பைப் ***இந்தப் பூலோகத்தில் நிறைவேற்றும் போது பரலோக ஆசீர்வாதங்களினால் எங்களை நிரப்பிடுவார்.*** பரலோக இராஜ்யத்தையும் அதன் நீதியையும் தேடும் போது எங்கள் வாழ்வில் சுகம், சந்தோஷம், சமாதானத்தில் தேவன் எம்மை ஆசீர்வதித்திடுவார். ***இன்று ஜெயம் தரும் நாள்!***

**ஜெபம்**

என் தேவனே! பெற்றோரை விட மேலதிகமாக என்னைக் குறித்து நீங்கள் உபகாரம் செய்வதை நான் அறிவேன். உங்கள் இராஜ்யத்தையும், நீதியையும் தேடி அனைத்திலும் ஆசீர்வாதம் பெற எனக்கு தயை செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது." (சங்கீதம் 34:10)

ஜீவ மன்னா

நவம்பர் 10

திங்கள்

## துதிக்குப் பாத்திரரான எங்கள் ஒரே தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

1 கொரிந்தியர் அதி: 13 – 14

**“கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?”** (யாத்திராகமம் 15:11)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! தேவ வசனத்தில் புது பெலன் பெற்று, வசனத்தில் நிலைத்திருந்து ஆவிக்குரிய கனி தருபவர்களாக வாழ வேண்டுமென்று **ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் வாழ்த்துகின்றேன்.** நாள் முழுவதும் எங்களை பாதுகாத்துக் கொள்ளும், இயற்கையாக நடைபெறுகின்ற காரியங்களைக் கூட மாற்றி **எங்களை ஆசீர்வதிக்கும் மகத்துவமானவராகிய தேவ பிதாவானவர் எங்களோடு இருக்கின்றார்.** என்றும் தேவன் எம்மீது அளவில்லா அன்பு செலுத்துகின்றார் என்பதையும் நாங்கள் அறிந்துக் கொள்ளக் கிடைத்தமை **நாங்கள் பெற்ற மேன்மையான வரப்பிரசாதமாகும்.**

தேவ பிள்ளைகளே! மேற் கூறப்பட்ட **யாத்திராகமம் 15:11**இல் கூறப்படுகின்றதாவது, தேவன் ஒப்பற்ற தேவன் என்றாகும். மோசேயும் இஸ்ரவேல் ஜனங்களும் தேவனுக்கு ஒரு பாடலைப் பாடி “கர்த்தாவே தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்?” **பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும் அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?** என்று கூறினார்கள். ஆகையால் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!** உங்களுக்கு ஏற்படும் ஏதாவதொரு **பிரச்சினை, துன்பங்கள், சவால்கள்** என்பனவற்றிற்கு முகம் கொடுக்க நேரிடுகையில் ஐயோ எனக்கு இம்மாதிரியான பிரச்சினைகள் ஏன் ஏற்படுகின்றது.? என கலங்காத வண்ணமாகவும் அத்தோடு **உங்கள் உள்ளம் குழப்பமடைய இடங் கொடுக்காதீர்கள்.** அப்படியே நான் எப்படி இவைகளுக்கு முகங் கொடுத்து வெற்றி பெறுவேன்? என்று நினைத்து வேதனையடையாதீர்கள். நீங்கள் முழு உள்ளத்தோடு தேவனை விசுவாசித்து உங்கள் வாழ்வை இயேசுவுக்கு அர்ப்பணிப்பீர்களெனின் அவர் உங்கள் வாழ்வில் அற்புதமான காரியங்களைச் செய்து தேவன் உங்களை முன்னோக்கிக் கொண்டு செல்வார். ஏனென்றால் தேவனால் ஆகாத காரியம் இந்த முழு உலகிலேயே ஒன்றுமில்லை.

தேவ பிள்ளைகளே! உங்கள் வாழ்க்கை எனும் கப்பல் ஆத்மீக பாதையில் பயணம் செல்லுமிடத்து உங்கள் வாழ்க்கைக்கு விரோதமாக எழும்புகின்ற பிரச்சினை, உபத்திரவங்கள், துன்பங்கள் என்னும் வெள்ளம், சூறாவளி, புயல் ஆகிய அனைத்துமிலிருந்து உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களோடிருந்து அவையனைத்தையும் தேவன் **உங்கள் பட்சத்திலிருந்து மேற்கொண்டு, கடிந்து நிர்மூலமாக்கி விடுவார்.** ஏனென்றால் நீங்கள் தேவனது **சொந்த பிள்ளையாக இருப்பதனால் உங்கள் வாழ்வைக் குறித்த எல்லா பராமரிப்புகளையும், எதிர்கால நிகழ்வுகளையும் தேவன் பொறுப்பேற்றுள்ளார்.** நீங்கள் அதனை உள்ளத்தில் கொண்டு தேவனை **உங்களின் முழு உள்ளத்தோடும் நேசியுங்கள். தேவனோடு நெருங்கி ஜீவியுங்கள்.** தேவன் இன்றும் உங்கள் மீது அளவுகடந்த அன்புள்ள தெய்வமாக இருக்கின்றார். **இன்றும் வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

பரலோக தேவனே! நீங்கள் எல்லையில்லா தேவன் நீங்கள் எனக்குக் காட்டும் அன்பு, தயவு, இரக்கம் மனதுருக்கம் எல்லையற்றதொன்றாகும். அப்படியே உங்கள் செயல்களும் பராக்கிரமமானவைகளாகும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை.” (ஏசாயா 59:1)

ஜீவ மன்னா

நவம்பர் 11

செவ்வாய்

# திக்கற்றவர்களுடைய ஜெபங்களையும் விண்ணப்பங்களையும் அங்கீகரிக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

1 கொரிந்தியர் அதி: 15 – 16

**"திக்கற்றவர்களுடைய ஜெபத்தை அலட்சியம்பண்ணாமல், அவர்கள் விண்ணப்பத்தை அங்கீகரிப்பார்."** (சங்கீதம் 102:16)

அருமையான தேவ பிள்ளைகளே! **எங்கள் அடைக்கலமும், நாங்கள் நம்பியிருக்கும் கனமலையுமாயிருக்கிற வல்லமையான இயேசுவின் நாமத்தில் இன்றைய நாள் இனிதான நாளாக இருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** இயேசுகிறிஸ்துவுக்குள் நீங்கள் மறுபடியும் ஆவிக்குள் பிறந்திருக்கிறபடியால் நீங்கள் இலங்கையர் எனினும் பரலோகத்தவராக **மகா உன்னதமான வரப்பிரசாதத்தைப் பெற்றுள்ளீர்கள்.** ஆகையால் தேவ ஆவியானவர் உங்களுக்குள் வாசம் பண்ணி ஜீவனுள்ளோரின் தேவ இராஜ்யத்திற்கு கொண்டு செல்ல உங்களை ஆயத்தம் செய்கின்றார்.

தேவ பிள்ளைகளே! உலகில் வாழ்கின்ற அனைத்து மனிதர்களினதும் **வாழ்க்கையில் நினையாத வேளைகளில் ஒரு நொடிப் பொழுதில் நன்மையானவைகளும், சுப காரியங்களும் நடந்தேறுகின்றன.** அதே போல் அசுபமான காரியங்களும், தீமைகளும் நடைபெறுகின்றன. உலகில் மனிதர்களுக்கு மாத்திரமின்றி தேவ பிள்ளைகளான எங்களுக்கும் அப்படியே நடைபெறுகின்றது. ஆனாலும் நீங்கள் சிருஷ்டிப்பின் தேவ பிதாவானவரின் அன்பான பிள்ளையாகவிருப்பதால் **நீங்கள் நினையாத வேளைகளில் முகம் கொடுக்க நேரிடுகிற பிரச்சினைகள், உபத்திரவங்களின் போது நீங்கள் அதற்குள் சிறைப்பட்டு அநாதரவாக இருப்பதில்லை.** ஏனென்றால் நீங்கள் இடைவிடாது ஜெபிக்கும் வேளை உங்களது ஜெபத்தைக் கேட்டு தேவன் அவற்றினின்று உங்களை மீட்டுக் கொள்வார். ஆகையால் உள்ளம் கலங்காதிருங்கள்! இன்றைய நாளில் **சங்கீதம் 102:17**இல் உங்களுக்கு கூறுவதாவது தேவன் **"திக்கற்றவர்களுடைய ஜெபத்தை அலட்சியம் செய்வதில்லை. அவர்களின் விண்ணப்பத்தை அங்கீகரிப்பார்"** என்றாகும். அப்படியானால் அவரது பிள்ளையாகிய நீங்கள் உங்கள் பிரச்சினையில் தீர்வின்றி சிறைப்பட்டு ஒரு போதும் அநாதரவாக நிற்பதில்லை.

தேவ பிள்ளைகளே! **பொருளாதார குறைபாடுகள் காரணமாக இரும்பாலான தேவ பிள்ளைகள் பணம் சம்பாதிப்பதில் மும்முரமாக ஈடுபடுகின்ற போது பலவிதமான காரியங்களைச் செய்ய நேரிடுகிறது.** அப்பொழுது **ஜெபிக்க மறந்து போய் விடுகிறார்கள்.** தேவனின் அநுக்கிரகத்தை பெறாது, அநேக காரியங்களைச் செய்ய முற்படும் போது அவர்களின் எதிர்பார்ப்பைப் போன்று வெற்றி கிடைக்காதபடியால் பெரும்பாலான நேரங்களில் **அவர்கள் அதைரியப்பட்டு வாழ்வில் பின்னோக்கி போய் விடுகிறார்கள்.** அதன் பிறகு தேவனைக் குறித்து குறை கூறி மேலும், மேலும் பாவங்கள் செய்யத் தொடங்கி விடுவார்கள். ஆனாலும் நீங்கள் அவ்வண்ணமாகச் செய்யாதபடி ஜெபம் செய்து பரலோகப் பிதாவானவரோடு நெருங்கி ஐக்கியப்பட்டு விடுங்கள். தேவன் உங்கள் ஜெபத்தைக் கேட்டு **உங்களுக்கு துணை புரிவாராக! இன்று வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! நீங்கள் ஆதரவற்றவர்களின் ஜெபத்தை அலட்சியம் செய்யாத தேவன். உங்களை இடைவிடாது ஆராதித்து, ஜெபிக்கும் போது நாம் ஒரு போதும் அநாதையல்லவே, ஆகையால் இடைவிடாது ஜெபம் செய்ய எனக்கு பெலன் தாருங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவுகொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்." (ஏசாயா 65:24)

ஜீவ மன்னா

நவம்பர் **12**

புதன்

# தேவனுக்குச் சித்தமானவைகளை மாத்திரம் செய்யுங்கள் !

இன்றைய வேதவாசிப்பு

2 கொரிந்தியர் அதி: 01 – 02

**"பெலிஸ்தருக்கு விரோதமாய்ப் போகலாமா, அவர்களை என் கையில் ஒப்புக் கொடுப்பீரா என்று தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்தபோது, "**
(2 சாமுவேல் 5:19)

அன்பான தேவ பிள்ளைகளே! **புதிதான கிருபையைப் பொழியும் ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தினால் இன்றைய நாளும் வெற்றிகரமான நாளாயிருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** உலகின் பெரும்பாலான மனிதர்கள் இன்னுமொரு மனிதனின் நன்மைகளை, அல்லது அவரின் திறமைகளைக் குறித்து பாராட்டுவது அவரை உயர்த்திக் கூறுவது ஆகியவைகளில் பிரியமற்று இருப்பார்கள். ஆனாலும் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! ஏனென்றால் **நீ எனக்கு அருமையானவனென்று உன்னை உலகில் தேர்ந்தெடுத்துக் கொண்ட உங்கள் தேவன் கூறுகிறார்.**

தேவ பிள்ளைகளே! தன்னால் செய்ய முடியாததொன்றைக் குறித்து இன்னுமொரு **மனிதனை பாராட்டுவது ஏன்?** என்று மனிதனது உள்ளத்தில் எழும்பும் **பொறாமையான சிந்தனைகள் ஏற்படுவதனால் அப்படியாகலாம்.** ஆனாலும் **சிருஷ்டிப்பின் தேவன் தான் படைத்த பிள்ளைகளை எவ்வளவு பாராட்டுகிறார்?** என எண்ணிப் பாருங்கள். அப்படியாக **தேவன் பாராட்டுவது தேவன் என் மேல் அளவற்ற அன்பு கொண்டிருப்பதனாலாகும்.** ஆகையால் நீங்கள் உங்கள் முழு உள்ளத்தோடு தேவனுக்கு அன்பு செய்து, தேவனுக்கு பிரியமானவர்களாக ஜீவியுங்கள். விஷேடமாக நீங்களும் உங்கள் எல்லாவித கிரியைகளின் போதும் இயேசுவுக்கு முதலிடம் கொடுத்து செயற்படுங்கள். மேற் கூறப்பட்ட **2 சாமுவேல் 5:19**இல் எழுதப்பட்டிருப்பது "**முழு இஸ்ரவேல் தேசத்தையும் அரசாண்ட தாவீது ராஜா பெலிஸ்தியருக்கு விரோதமாக போர் தொடுக்கச் செல்லும் முன்னர் நான் பெலிஸ்தருக்கு விரோதமாய்ப் போகலாமா? அவர்களை என் கையில் ஒப்புக் கொடுப்பீரா? என்று தேவனிடம் கேட்டதையே**" ஆகும்.

தேவ பிள்ளைகளே! தன்னுடைய தகப்பனாரின் மந்தைகளை மேய்த்துக் கொண்டிருந்த சிறியவனான தாவீது இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாக தேர்ந்தெடுத்தது அவரை அபிஷேகம் செய்து இஸ்ரவேல் சிங்காசனத்தில் அமர்த்திய தேவனாகிய கர்த்தரை தாவீது ராஜா ஒரு போதும் மறக்கவில்லை தாவீது ராஜா எப்போதும் தேவனையே சார்ந்திருந்தார். ஆகையால் தேவன் தாவீது ராஜாவை **சவுலின் 40 வருட அரசாட்சிக்கு பின்னதாக ராஜாவாக ஏற்படுத்தினார். ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டேன்.** எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக் குறித்து சாட்சியும் கொடுத்தார். நீங்களும் தேவனுக்குச் சித்தமானவைகளை செய்பவர்களாக ஜீவித்து **தேவனின் பாராட்டைப் பெற்று வாழ்வில் வெற்றி பெறுங்கள். ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் என்னை அன்போடு வழி நடத்துவதால் ஸ்தோத்திரம். உங்களுக்கு முதலிடங் கொடுத்து என் வாழ்வின் எந்தவொரு காரியத்தினையும் செய்ய முன்னதாக முதலில் உங்களிடம் கேட்டு உங்கள் சித்தத்தோடு செய்ய உதவி செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க, தேவன் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார்." (சங்கீதம் 53:2)

ஜீவ மன்னா

நவம்பர் **13**

வியாழன்

# அறுப்பு மிகுதியானபடியால் வேலையாட்களைத் தேடும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

2 கொரிந்தியர் அதி: 03 – 04

**"தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்;"** (பா:மத்தேயு 9:37)

அன்பார்ந்த தேவ ஜனங்களே! ஜீவிக்கின்ற நமது இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமம் **இந்த பூமியில் சகல ஜாதிகளுக்குள்ளேயும் உயர்ந்திருப்பதால் இயேசுவின் வல்லமையான நாமத்தில் இக்காலைப் பொழுதில் வாழ்த்துகின்றேன்.** எல்லா நாட்களையும் போன்று இன்றைய நாளிலும் ஜீவ மன்னா புத்தகத்தில் தேவனின் உன்னதமான தேவ செய்தி உங்களிடம் கொண்டு வந்து **உங்கள் ஆத்துமாவில் காலையிலேயே புத்துணர்ச்சியை ஏற்படுத்த எனக்கொரு சந்தர்ப்பத்தைக் கொடுத்த தேவனை நோக்கி ஸ்தோத்தரிக்கின்றேன்.** ஏனென்றால் அவர் தேவ ஆவியானவரான என்னில் ஜீவித்து தேவனுக்கு பிரியமானதை என்னில் நிறைவேற்றுவதனால் **நான் அதிர்ஷ்டசாலி!**

தேவ பிள்ளைகளே! தேவனது விஷேட காரியங்களை இந்த பூமியில் நிறைவேற்ற **வரப்பிரசாதத்தை நீங்களும் பெற்றுக் கொள்ள முடியும்.** அப்படி செய்ய முடிந்தால் நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள்! ஏனெனில் "**அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்**" எனபதாக மத்தேயு 9:37 இல் எழுதப்பட்டுள்ளது.. அதின் கருத்தானது தேவ இராஜ்யத்திற்காக தன்னை அர்ப்பணித்து தேவ ஊழியங்களைச் செய்ய இன்னும் அநேக ஊழியக்காரர்கள் அவசியம். இன்று இந்த தேவ செய்தியை வாசிக்கின்ற நீங்கள் இதைக் குறித்து சற்று சிந்தித்துப் பாருங்கள். உங்களை ஆசீர்வதிக்கின்ற தேவனுக்காக தேவனது இராஜ்யத்திற்காக **அர்ப்பணித்து ஊழியம் செய்ய நீங்களும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொள்ள ஜெபம் செய்யுங்கள்.** பெற்றோர்களே வாலிப பிள்ளைகள் உங்களுக்கு இருப்பார்களெனின் உங்கள் வாலிபப் பிள்ளைகளை தேவ இராஜ்யத்திற்கு அர்ப்பணித்து அவர்கள் ஊழியஞ் செய்ய தேவன் தேர்ந்தெடுக்க வேண்டுமென ஜெபியுங்கள் **கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்** என்று தேவ வசனத்தில் எழுதப்பட்டுள்ளதால் தேவன் உங்களுக்கு **பதில் தருவாராக!**

தேவ பிள்ளைகளே! உங்களுக்காக சிலுவையில் தன்னையே **பலியாக** ஒப்புக் கொடுத்த இயேசுகிறிஸ்துவுக்காக, உங்களைப் போன்ற இன்னுமொரு மனிதனை பாவத்தினின்று மீட்டுக் கொள்ள பிசாசின் இருள் இராஜ்யத்தினின்று விடுவிக்க நீங்கள் விரும்புவீர்களெனின் **தேவன் உங்களைத் தேர்ந்தெடுத்து தேவனின் ஆவியில், வல்லமையில் உங்களை நிரப்பி தேவனுக்குப் பிரியமானபடி உங்களைப் பாவிப்பாராக,** இயேசுவே! உங்களுக்குகந்த வண்ணமாக ஊழியத்தில் என்னைப் பாவிக்கும்படியாக ஜெபிக்கிறேன். எனக் கேளுங்கள். தேவன் உங்களைக் குறித்து மிகவும் பிரியமாக இருந்து உங்களை பாவிப்பார். **இன்று வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! பாவிகளை இரட்சிப்பதே உங்கள் பிரியமாயிருக்கிறது. உங்கள் சித்தத்தை இவ்வுலகில் நிறைவேற்ற நீங்கள் என்னையும் தேர்ந்தெடுத்து உங்கள் ஆவியிலும், வல்லமையிலும் நிரப்புங்கள் இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்." (பிலிப்பியர் 2:13)

ஜீவ மன்னா

நவம்பர் 14

வெள்ளி

# உங்கள் வாழ்வை கறைப்படுத்தும் காரியங்களில் விலகி பரிசுத்தமாயிருங்கள் !

இன்றைய வேதவாசிப்பு

2 கொரிந்தியர் அதி: 05 – 06

**"சாபத்தீடானதில் ஏதாகிலும் எடுத்துக்கொள்ளுகிறதினாலே, நீங்கள் சாபத்தீடாகாதபடிக்கும், இஸ்ரவேல் பாளயத்தைச் சாபத்தீடாக்கி அதைக் கலங்கப்பண்ணாதபடிக்கும், நீங்கள் சாபத்தீடானதற்குமாத்திரம் எச்சரிக்கையாயிருங்கள்."** (யோசுவா 6:18)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! உங்கள் வாழ்க்கைப் பயணத்திலே காற்றையும், கடலையும் அமரப் பண்ணுகின்ற வல்லமையான இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய காலைப் பொழுதில் வாழத்துகின்றேன். உலகில் அனைத்து ஜாதிகளின் மத்தியில் பரிசுத்த பிள்ளைகளாக பரலோகம் **பிதாவானவர் உங்களைத் தெரிந்துக் கொண்டமையால் நீங்கள் அதிரஷ்டசாலிகளாவீர்கள்**! ஏனென்றால் கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக, நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்தேன். **லேவியராகமம் 20:26**இல் தேவன் கூறியிருக்கிறார்.

தேவ பிள்ளைகளே! மேற் கூறப்பட்ட வசனமானது இஸ்ரவேல் ஜனங்களில் தலைவனான யோசுவா மூலம் கூறப்பட்டதாகும். ஏனென்றால் எரிக்கோ பட்டணத்தை கைப்பற்ற அவர்கள் சென்றவிடத்து தேவன் யோசுவாவிற்கு இவ்வாறாகக் கூறினார். தேவனால் எரிக்கோ பட்டணம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதென்றும் நகரமும் அங்கு காணப்படுகின்ற அனைத்தும் தேவன் மூலமாக அழிக்கப்படுமென்றும் ராகாப் எனும் பெண் இஸ்ரவேல் புத்திரர்களில் வேவு பார்க்க வந்தவர்களை ஒளித்து வைத்து அவர்களின் உயிரைக் காப்பாற்றியபடியால் அவளும் அவளுடைய வீட்டார் அனைவர்களும் மாத்திரம் பட்டணத்தில் காப்பாற்றப்பட்டு மிகுதியானவர்களாக இருப்பார்கள். "**சாபத்தீடானதில் ஏதாகிலும் எடுத்துக் கொள்கிறதினாலே, நீங்கள் சாபத்தீடாகாதபடிக்கும், இஸ்ரவேல் பாளயத்தைச் சாபத்தீடாக்கி அதை கலங்கப் பண்ணாதபடிக்கும்,** நீங்கள் சாபத்தீடானதற்கு மாத்திரம் எச்சரிக்கையாயிருங்கள் என்று இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கூறினார்.

தேவ பிள்ளைகளே! அன்று இஸ்ரவேல் ஜனங்களுக்கு போன்று உங்கள் கர்த்தர் இன்று உங்களுக்கு கூறுவதாவது தேவனுக்கு பிரியமில்லாத காரியங்கள் எதுவாக **இருப்பினும் நீங்கள் செய்ய வேண்டாம் என்பதையே ஆகும்.** ஏனெனில் உங்களை பரிசுத்தத்திலும், பரிசுத்த வாழ்க்கையிலும் கர்த்தருக்கு முன்பாக உண்மையாக இருப்பதற்கே கர்த்தர் உங்களைத் தேர்நதெடுத்துள்ளமையால் உங்கள் கிரியைகள், நினைவுகள் எல்லாவற்றிலும் பரிசுத்தமாயிருங்கள். எவ்வேளையிலும் கவனமாயிருங்கள். **தேவனுடைய வசனத்திற்கு கீழ்படியாது செயற்படுவீர்களாயின் அதன் மூலமாக சாத்தானுக்கு உங்கள் வாழ்க்கையை அழிக்க சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கின்றீர்கள்.** ஏனெனில் உங்கள் கிரியை காரணமாக உள்ளத்தில் ஏற்படுகின்ற நினைவுகள் காரணமாக குழப்பமடைந்து, கலக்கமடைந்து விடுவீர்கள். ஆகையால் தேவனுக்கு பிரியமில்லாத அனைத்து காரியங்களையும் தவிர்த்து விடுங்கள். **ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் இஸ்ரவேலின் தேவனைப் போன்று எனக்கும் தேவனுமாக இருக்கின்றீர்கள். எல்லா வேளையிலும் தேவனுக்கும் தேவ சத்தத்திற்கு கீழ்படிந்து உங்களுக்கு பிரியமில்லாத காரியங்களில் விலகி இருக்க எனக்கு உதவி செய்யுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"விவேகத்துடன் காரியத்தை நடப்பிக்கிறவன் நன்மைபெறுவான்; கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான்." (நீதிமொழிகள் 16:20)

ஜீவ மன்னா

நவம்பர் 15
சனி

# எல்லா உபத்திரவங்களிலும் மீட்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
2 கொரிந்தியர்
அதி: 07 – 08

**“...இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லையென்றான்.”** (தானியேல் 3:29)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தினால் உங்களை வளமுடன் வாழும்படியாக வாழ்த்துகின்றேன்.** சுமார் இரண்டு கோடியே மூன்று இலட்சம் அளவில் இலங்கையில் வாழ்கின்ற இலங்கையர்களைப் படைத்த சிருஷ்டிப்பின் தேவனானவர் யார்? என்பதை அறிந்து தேவனைக் குறித்து முழு உள்ளத்தோடு விசுவாசித்து ஜீவிக்கும் உங்களைப் போன்ற இன்னுமொரு **அதிர்ஷ்டக்காரர் உலகில் இல்லையென நான் உங்களுக்கு உறுதியாகக் கூறுகின்றேன்.** ஏனென்றால் தேவன் மாம்சமான யாவருக்கும் இரட்சகரானவர்.

தேவ பிள்ளைகளே! பரிசுத்த வேதாகமத்தில் **தானியேல் 3ம் அதிகாரத்தில்** யூதா மனிதர்கள் மூன்று பேரைக் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களின் பெயர்கள் **சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ எனப்படும்.** பாபிலோனில் நேபுகாத்நேச்சர் **அறுபது முழ உயரமும், ஆறு முழ அகலமுமான ஒரு பொற்சிலையைப் பண்ணுவித்து, தேசத்தில் வாழ்கின்ற ஜனங்களை தாழவிழுந்து பணிந்து கொள்ளுமாறு கட்டளையிட்டான்.** ஆனால் இந்த யூத மனிதர்கள் மூன்று பேரும் ராஜாவின் கட்டளைக்கு கீழ்படியாது அந்த பொற்சிலையை வணங்கவில்லை. அதனால் கோபமுற்ற ராஜா அக்கினிச் சூளையை சாதாரணமாய்ச் சூடாக்குவதைப் பார்க்கிலும் ஏழு மடங்கு அதிகமாய்ச் சூடாக்கும்படி உத்தரவு **கொடுத்து சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களை எரிகின்ற அக்கினிச் சூளையிலே போடுவதற்கு அவர்களைக் கட்டும்படி தன் இராணுவத்தில் பலசாலிகளாகிய புருஷருக்குக் கட்டளையிட்டான்.** ஆனால் ராஜாவோ அக்கினி நடுவே நால்வர் விடுதலையாக உலாவுகிறதை கண்டான். அதை பற்றி மந்திரியிடம் கூறினான்.

தேவ பிள்ளைகளே! மேலும் நேபுகாத்நேச்சர் அக்கினியின் நடுவிலிருந்து வெளியே வரும்படி யூதர் மூன்று பேருக்கும் கூறினான். **மூன்று பேரும் தங்களின் மேல் அக்கினி எரிந்து போகாமலும், தலைமயிர் கருகாமலும் அவர்களுடைய சால்வைகள் சேதப்படாமலும் இருந்தார்கள்.** அக்கினி மணம் அவர்களிடம் வீசப்படவில்லை. அப்பொழுது ராஜா இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லையென்றான். ஆகையால் **நீங்கள் தைரியமாயிருங்கள்.** தேவன் இன்றும் ஜீவிக்கின்றவராக இருக்கிறார். உங்களுக்கு உண்டாகும் பிரச்சினை, துன்பம், உபத்திரவங்கள் என்பவற்றைக் குறித்து சிந்தித்து **அதைரியப்படாதீர்கள்.** அக்கினிச் சூளையில் வேதனைகளை அனுபவிக்க வேண்டியிருந்த போதும் தைரியமாக தேவனை முழு விசுவாசத்தோடு நோக்கியிருந்து அக்கினிச் சூளையின் மத்தியில் தேவனது கருணையைப் பெற்ற மூன்று மனிதர்களைப் போன்று சூளையைப் போன்ற உபத்திரவங்களுக்கு முகங் கொடுக்க நேரிட்டாலும் தேவன் உங்களோடிருந்து **உங்களை எல்லாவித துன்பங்களையும் நீக்கி காத்திடுவார். இன்று வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் எம்மை எல்லாவித வழிகளிலும் எங்களை மீட்க வல்லவர் என்பதால் ஸ்தோத்திரம் இன்றும் உங்கள் பேரில் விசுவாசம் வைத்துள்ளேன். எல்லா காரியங்களிலும் எனக்கு உபகாரம் செய்தருளுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“கர்த்தர் நல்லவர், இக்கட்டுநாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்.” (நாகூம் 1:7)

ஜீவ மன்னா

நவம்பர் **16**

ஞாயிறு

# நியாயக்கேடான காரியங்களை நீங்கலாக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

2 கொரிந்தியர் அதி: 09 – 10

**"அவர்களை யொடுக்கும்படி ஒருவருக்கும் இடங்கொடாமல், அவர்கள்நிமித்தம் ராஜாக்களைக் கடிந்துகொண்டு:"**
(1 நாளாகமம் 16:21)

பரலோகத்தின் தேவனுடைய அழைப்பிற்கு பாத்திரமான தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய தினம் வெற்றி சிறந்த நாளாக அமையுமாறு வாழ்த்துகின்றேன்.** ஒரு மனிதனை இன்னுமொரு மனிதன் புரிந்து கொள்ளுதல் மிகக் கடினம். ஏனெனில் **மனித இருதயத்தை ஆராய்ந்தறிவது முடியாத காரியம்.** ஆகையால் நீங்கள் இன்னுமொருவருக்கு **முழு உள்ளத்தோடு செய்யும் உதவிகள், ஒத்தாசைகள் சில நாட்களில் அவர்களுக்கு மறந்து போய் விடுகிறது.** உங்களை காணும் போதும் கூட உங்களை அறியாதவர்கள் போல் நடந்து கொள்வார்கள். அவர்களின் இக்கட்டான சூழ்நிலைகளின் மத்தியிலும் நாம் அவர்களுக்கு செய்யும் உபகாரங்கள் அவர்களுக்கு மறந்து போய் விடுகிறது.

தேவ பிள்ளைகளே! உலக வாழ் மனிதர்கள் எப்படியான போதும் தேவனுடைய பிள்ளைகள் கூட இப்படியாக செயல்படும் போது ஏன் **இவர்கள் கூட இப்படியாக நடக்கிறார்கள் என எண்ணத் தோன்றுகிறது அல்லவா?** உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! ஏனெனில் உங்கள் தேவனாகிய கர்த்தர் ஒரு போதும் **இஸ்ரவேல் ஜனங்களை அடிமைத்தனத்திற்கு, ஆக்கினைக்குள்ளாக நியாயந்தீர்க்க இடமளிக்கமாட்டார்** என்பதை இன்றைய தினம் ஆரம்ப **1 நாளாகமம் 16:21** "அவர்களை யொடுக்கும்படி ஒருவருக்கும் இடங் கொடாமல்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தேவ பிள்ளைகளாகிய நீங்கள் அவருடைய வம்சமான உங்களை அவர் ஒரு போதும் உலக வாழ் மனிதர்களினாலோ, தேவ பிள்ளைகளாலோ அல்லது உங்கள் எதிராளியான சாத்தானினாலோ **எந்தவொரு அநியாயமான காரியங்களும் உங்கள் வாழ்வில் ஏற்பட அவர் ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்.** அவர் உங்களை தெரிந்துக் கொண்டபடியால் நீங்கள் அவரது உடமையாக இருக்கிறீர்கள். இதை நீங்கள் நன்றாக உணர்ந்து கொள்ளுங்கள். அதன்படி அவருக்கு கீழ்படிந்து அவர் கூறுவதன் பிரகாரம் நீங்கள் வாழ்வீர்களானால் தேவன் உங்களோடிருப்பார். அவர் உங்கள் முன்பாக கடந்து போய் உங்களை பாதுகாத்து அவருடைய தெய்வீக அனுக்கிரகம் உங்கள் மேல் கடந்து வர கிருபை செய்வார்.

தேவ பிள்ளைகளே! முதன் முதலாக நீங்கள் அவரை முன்மாதிரியாகக் கொண்டு வாழ முயற்சி செய்யுங்கள். உங்களிடம் தவறுகள், பாவங்கள், குறைகள் காணப்படும் போது **நீங்கள் உலகரீதியில் வாழும் மனிதர்களை குறித்து குறை கூறுவது எப்படி?** தேவ பிள்ளைகளுடைய செய்கைகளில் குறைகளை சொல்லாதபடி வாழ முயற்சி செய்யுங்கள். ஆகையால் இன்று முதல் நீங்கள் மற்றவர்களுக்கு **அநீதி இழைக்காதபடி வாழ கற்றுக் கொள்ளுங்கள்.** அதே போல் யாராவது உங்களுக்கு அநியாயம் செய்ய முற்பட்டால் **நீங்கள் கர்த்தரை நோக்கி ஜெபியுங்கள்.** தேவன் உங்களை சகல தீங்கிற்கும் விலக்கி பாதுகாத்துக் கொள்வார். **வெற்றிச் சிறந்த மன மகிழ்ச்சியின் நாள்!**

**ஜெபம்**

என் அன்பின் பரலோக தேவனே! அன்பின் நீங்கள் என்னை உங்கள் சுவீகாரப் பிள்ளையாக மாற்றி எவராலும் எனக்கு அநீதி ஏற்படாது காத்து வருகிறபடியால் நன்றி இன்றும் என்னைக் காத்தருளும்படி ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப்பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்." (ஏசாயா 43:1)

ஜீவ மன்னா

நவம்பர் 17 திங்கள்

# பரிசுத்த ஆவியானவருக்கு கீழ்ப்படிந்திருங்கள் !

இன்றைய வேதவாசிப்பு
2 கொரிந்தியர் அதி: 11 – 12

**“அவன் சோராவுக்கும் எஸ்தாவோலுக்கும் நடுவிலுள்ள தாணின் பாளயத்தில் இருக்கையில் கர்த்தருடைய ஆவியானவர் அவனை ஏவத்துவக்கினார்.”** (நியாயதிபதிகள் 13:25)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! அருபியானவராய் எம் மத்தியில் செயல் புரியும் **ஜீவனுள்ள தேவனின் வல்லமையான நாமத்தினால் ஜெயம் பெற்றோராய் இன்று மகிழ்ந்திருக்கும்படி வாழ்த்துகின்றேன்.** பரமண்டலங்களிலிருந்து ஆளுகை செய்யும் படைத்தவரின் **பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெற்ற நாமனைவரும் பாக்கியவான்கள்.** ஏனெனில் உலகத்தில் சாதாரண மனிதர்களாக பாவத்தின் அடிமைத்தனத்தில் வாழ்கிறவர்களாக இருந்த எம்மை பெயர்ச் சொல்லி ஒவ்வொருவராய் அழைத்து அன்பு கூர்ந்து, சந்தித்து, விடுவித்து மறுபிறப்படையச் செய்து எங்கள் வாழ்வினை மாற்றி, மகாவல்லமையுள்ள உன்னதமான தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் எமக்குள் வாசம் பண்ணும்படியாக இறங்கி வருவது எவ்வளவு அற்புதமான காரியம். ஆகவே **நாம் பாக்கியவான்கள்.**

அன்பார்ந்தவர்களே! **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக**! இன்றைய இச் செய்தியின் தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளதான தேவ வார்த்தையானது இஸ்ரவேல் மனிதனாகிய சிம்சோன் என்னும் ஒரு மனிதனைக் குறித்ததாகும். இவன் **தாண் வம்சத்தானாகிய மனோவா என்னும் மனிதனுடைய குமாரனாவான்.** மனோவா தம்பதிகள் பிள்ளை பேறு இல்லாதவர்களாய் இருந்தார்கள். மலடியான மனோவாவின் மனைவிக்கு **தேவதூதன் தரிசனமாகி தேவன் அவன் மீது இரங்கி புத்திர பாக்கியத்தை கொடுத்திருப்பதை அறிவித்தான்.** அதன்படி அவள் கர்ப்பவதியாக இருக்கும் போதே அவனை இஸ்ரவேலை பெலிஸ்தரியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கும்படியாக தெரிந்துக் கொண்டார். அதன்படி அந்த ஸ்திரி ஒரு குமாரனைப் பெற்று **சிம்சோன் எனப் பெயரிட்டான்.** அந்தப் பிள்ளை வளர்ந்தது தேவன் அவனை ஆசீர்வதிக்கத் தொடங்கினார்.

தேவ பிள்ளைகளே! இஸ்ரவேல் ஜனங்களை பெலிஸ்தியர் என்பவர்களிடமிருந்து விடுவிக்கும்படி அவனை தெரிந்துக் கொண்டார். **சிம்சோனை தேவ ஆவியால் வல்லமைப்படுத்தி அவனை ஏவத்தொடங்கினார்.** இதுவே எமது பிரதான வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படியே அவன் ஜீவித்த நாட்களில் இவனால் **அழிக்கப்பட்ட பெலிஸ்தியர்கள் அநேகராயிருக்கிறார்கள்.** அதே போல் அவன் மரணமடையும் போதும் தேவ சித்தத்தை நிறைவேற்றும்படியாக அநேக பெலிஸ்தியரை அவனோடு சேர்த்து மரிக்கும்படியாக செயல்பட்டான். அவனுக்குள் இருந்த பரிசுத்தாவியானவர் அவனை ஏவி தேவ சித்தம் நிறைவேறச் செய்த ஆவியானவர் **இன்றும் உங்களுக்குள் வாசம் பண்ணுகிறார். இந்நாட்களில் தேவ சித்தம் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி அறுவடைச் செய்வதே.** அது உங்களில் நிறைவேறும்படி சுவிஷேசம் அறிவிக்கும்படியாக உங்களை ஆவியானவர் ஏவிக் கொண்டிருக்கிறார். நீங்கள் அவருக்கு இடமளித்தால் உங்கள் காரியங்கள் வெற்றிபெற அவர் உங்களுக்கு வழி காட்டுவார். பரலோக தேவனின் பரிசுத்த ஆவியானவருக்கு **நீங்கள் கீழ்படியுங்கள். நிச்சயம் வெற்றியுண்டு. ஜெயத்தின் நாள்**!

ஜெபம்

என் அன்பின் பரலோக தேவனே! உங்கள் தேவ ஆவியானவருக்கூடாக என்னை பரிசுத்தமாக்கி உங்கள் சித்தம் நிறைவேற்றும்படியாக ஏவுபவரே என்னை வழிநடத்தி இன்றும் உங்கள் ஆவியானவருக் கூடாக என்னை செயல்படச் செய்யுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.” (ரோமர் 8:14)

ஜீவ மன்னா

நவம்பர் **18**

செவ்வாய்

# சகல வழிகளிலும் நீதிமானாக கிரிகை செய்யும் தேவன்!

இன்றைய வேதவாசிப்பு

2 கொரிந்தியர் 13

கலாத்தியர் 01

**"கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவரும், தமது கிரியைகளிலெல்லாம் கிருபையுள்ளவருமாயிருக்கிறார்."**

(சங்கீதம் 145:17)

நம்மை அவருடைய நித்திய மகிமைக்கு அழைத்தவராகிய ஜீவனுள்ள தேவன் **இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றும் நல்ல ஆசீர்வாதங்கள் நிரம்பின நாளாக அமையும்படி என் தேவ பிள்ளைகளே வாழ்த்துகின்றேன்.** எங்களை சூழ்ந்திருக்கும் மனிதர்கள் மூலம் நாள் தோறும் அநேக வாழ்த்துக்களை பெற்றுக் கொள்கிறோம். அவைகள் எம் வாழ்வில் அப்படியே நிறைவேறுமா என்பதை நாம் அறியோம். சகல வாழ்த்துக்களும் நிறைவேறுமாகில் எமது நாட்கள் யாவுமே ஆசீர்வாதம் இருக்குமல்லவா? ஆனால் அப்படி நடைபெறுவதில்லை. ஆனால் **இயேசு என்னும் வல்லமையான நாமத்தினால் நாங்கள் வெளிப்படுத்தும் வேண்டுதல்கள் அந்த நாமத்தின் வல்லமையின் காரணமாக நிறைவேறுவதை நாம் காணக் கூடியதாக உள்ளது.**

தேவ பிள்ளைகளே! அவரது வல்லமையான நாமத்தையும் அவருடைய குணாதிசயங்களையும் அறிந்தவர்கள் பாக்கியவான்கள். எப்போதும் விசுவாசத்தோடு அவர் நாமத்தை உயர்த்தி அவரது மகிமையை கூறும் **விசுவாச வார்த்தைகளை உங்கள் நாவினால் அறிக்கை செய்யுங்கள்.** அப்போது உங்கள் வாழ்க்கை வளமடையும். மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும் அதில் பிரியபடுகிறவர்கள் அதன் கனியைப் புசிப்பான் என்றும் வேத வசனம் உரைக்கின்றது. இன்றைய தினம் மேலே கொடுக்கப்பட்ட பிரதான தேவ வசனம் **சங்கீதம் 145:17**இல் வெளிப்படுத்துகிறது. "கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவரும் தமது கிரியைகளிலெல்லாம் கிருபையுள்ளவருமாயிருக்கிறார்." இவ் வார்த்தைகளின்படி எமது வாழ்க்கையில் சகல காரியங்களிலும் அவர் நீதியுள்ளவராய் இருக்கிறார். **உங்களுக்கு ஒரு போதும் அநீதியான காரியத்தை நடக்க விடமாட்டார்.**

தேவ பிள்ளைகளே! நீங்கள் அவரிடம் விசுவாசத்தோடு கேட்பவைகளை அவர் கேட்டு பதிலளிக்கிறவராய் இருக்கிறார். வேதாகமத்தில் **எண்ணாகமம் 27ம் அதிகாரம் 1 முதலாம் வசனம் முதல் 11ம் வசனம்** வரை உள்ள ஒரு சம்பவமானது சொலாப்பியாத் என்னும் ஒரு மனிதன் ஐந்து புத்திரிகளை உடையவனாக இருந்தான். அவன் வனாந்தரத்தில் மரித்து போன பொழுது ஆண்பிள்ளைகள் இல்லாதபடியால் காணியாட்சிகள் கொடுக்கப்படாமல் மறுக்கப்பட்டது. அப்பெண்கள் மோசேயிடம் முறையிட்டார்கள். மோசே அவர்களுடைய நியாத்தைக் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு போனான். **கர்த்தர் அவர்களின் தகப்பனுடைய சகோதரர்களிடமிருந்து தகப்பனுடைய உரிமையை அப்பெண்கள் பெறும்படியாக செய்தார். கர்த்தர் இன்றும் மாறாதவராய் இருக்கிறார். சங்கீதம் 145:17**இல் எழுதியிருக்கிறபடி இன்றும் அவர் தமது வழிகளிகலெல்லாம் நீதியுள்ளவராய் இருக்கிறார். தமது கிரியைகளில் எல்லாம் கிருபையுள்ளவருமாய் இருக்கிறார். நீங்கள் அவரை நோக்கி ஜெபிக்கும் போது அவர் உங்களது நியாயத்தை விளங்கச் செய்வார். எல்லாவற்றிலும் உங்களுக்கு கிருபையை கட்டளையிடுவார். **இன்றைய நாள் ஆசீர்வாதத்தின் நாள்!**

**ஜெபம்**

என் அன்பின் பரலோக தேவனே! அப்பா பிதாவே தயவுள்ள நீதியுள்ளவராயும் விளங்குகிறவரான தேவனே! என் சகல காரணங்களைக் குறித்தும் உங்களை நோக்கி வேண்டுதல் செய்கிறேன். உங்கள் நியாயத்தின் பிரகாரமாய் பதிலளித்து வழி நடத்துமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"அப்பொழுது, மெய்யாய் நீதிமானுக்குப்பலன் உண்டென்றும், மெய்யாய் பூமியிலே நியாயஞ்செய்கிற தேவன் உண்டென்றும் மனுஷன் சொல்லுவான்."

(சங்கீதம் 58:11)

| ஜீவ மன்னா | எண்ணிக்கையில் குறைந்த ஆபிரகாமின் வம்சம் கர்த்தரின் ஆசீர்வாதத்தால் பெருகிற்று ! | இன்றைய வேதவாசிப்பு |
|---|---|---|
| நவம்பர் 19 புதன் | | கலாத்தியர் அதி: 02 – 03 |


**"உங்கள் சுதந்தரபாகமாக கானான் தேசத்தை உனக்குத் தருவேன் என்றார். அக்காலத்தில் அவர்கள் கொஞ்சத் தொகைக்குட்பட்ட சொற்பஜனங்களும் பரதேசிகளுமாயிருந்தார்கள்."**

(1 நாளாகமம் 16:18,19)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவன் **இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இப் புதிய தினத்திலே தெய்வீக சந்தோஷம், சமாதானம் கடந்து வரும்படி வாழ்த்துகின்றேன்.** உயிரோடிருக்கிற பரலோக தேவனுடைய சொந்தப் பிள்ளையாக மாற்றப்பட்டதின் நிமித்தம் உங்கள் வாழ்வில் நீங்கள் நினையாத எதிர்பாராத விஷேசித்த நன்மையான ஈவுகளை கிடைக்கப் பெறும் வேளையில் **நீங்கள் அறியாததும் எட்டாததுமான அநேக ஆத்மீக ஆசீர்வாதங்கள் உங்களுக்கு உரிமையாகி உள்ளதல்லவா?**

அருமையானவர்களே! தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை தனது வம்சமாக தெரிந்துக் கொண்டது அவரது உரிமைகளை அவர்களுக்கு கொடுக்கும் படியாகவே. ஏனெனில் கானான் தேசத்தை சொந்தமாக வழங்கும்படியாக செயல்பட்டார். சகல ஜாதிகளுக்கும் தகப்பனாக ஆபிரகாமை அவர் தெரிந்துக் கொண்டு " நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டு புறப்பட்டு நான் உனக்கு காண்பிக்கும் தேசத்திற்குப் போ நான் உன்னை பெரிய ஜாதியாக்கி ஆசீர்வதிப்பேன்." என்று ஆபிரகாமோடு பொருத்தனை செய்த கர்த்தர் தாமே அவைகளை நிறைவேற்றினார். இன்று எமது பிரதான வசனம் **1 நாளாகமம் 16:18,19**இல் உங்கள் சுதந்தரபாகமான கானான் தேசத்தை உனக்குத் தருவேன் என்றார். "அக்காலத்தில் அவர்கள் கொஞ்சத் தொகைகுட்பட்ட சொற்ப ஜனங்களும் பரதேசிகளுமாயிருந்தார்கள" **ஆபிரகாமின் வம்சத்தினர் சிறு தொகையினராக எழுபது பேர் எகிப்து தேசத்தை நோக்கிச் சென்றார்கள். அங்கே அவர்கள்** பலத்தவர்களாய் **தேவனால் பலுகிப் பெருகினார்கள். அவர்கள் எகிப்தின் அடிமைத்தனத்திற்கு நீங்கலாக்கி கானான் தேசத்தை நோக்கி புறப்படும் போது மாபெரும் சேனையாக இருந்தார்கள்.** பிள்ளைகள் கணக்கிலிடாது கால் நடையாக பிரயாணம் பண்ணும் புருஷர்கள் ஆறுலட்சமாயிருந்தார்கள் என வேதம் கூறுகிறது.

தேவ பிள்ளைகளே! உங்கள் வாழ்க்கை பயணத்தில் எக் காரியத்தில் குறை இருப்பினும் துக்கப்படாதீர்கள். வருமானம் குறைவுப்பட்டதாயினும், தொழில் சிறிதாக இருந்தாலும், சொந்த பந்தங்கள் இல்லாமல் குடும்பங்கள் சிறிதாக இருப்பினும் உங்கள் **இருதயம் கலங்காதிருப்பதாக!** ஆபிரகாமின் வம்சத்தை பெருகச் செய்தவர் **வெறுங்கையோடு பயந்து ஓடிய யாக்கோபை ஆசீர்வதித்து பலுகிப் பெருகச் செய்தவர் எம் தேவனாகிய கர்த்தரே!** எம் பிதாக்களை ஆசீர்வதித்தவர் இன்றும் உங்களோடிருக்கிறார். உங்களையும், வருமானங்களையும், தொழில்களையும் விருத்தியடைய, பெருகச் செய்ய தேவனால் கூடும். உங்கள் மத்தியில் ஜீவனுள்ளவராக வாசம் பண்ணும் **தேவன் உங்கள் குறைவுகளை மகா நிறைவுள்ளதாக ஆசீர்வதிக்கும்படி கிரியை செய்ய வல்லவராக இருக்கிறார். இன்றைய நாள் ஜெயத்தின் நாள்!**



**ஜெபம்**

என் அன்புத் தகப்பனே! இஸ்ரவேல் ஜனங்களை பெருகச் செய்து பலத்த ஜாதியாக மாற்றினவரே! என் சிறுமையை காண்கிறவரே என்னையும் உங்கள் ஆசீர்வாத கரத்தால் உயர்த்தி பெருகச் செய்து உங்கள் உரிமைகளை பெற்று ஆத்மீகத்தில் ஜெயம் பெறும்படி வழிநடத்துமாறு ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்; கர்த்தராகிய நான் ஏற்றகாலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன்." (ஏசாயா 60:22)

ஜீவ மன்னா

நவம்பர் **20**

வியாழன்

# உங்களை சொந்த ஜனங்களாக பிரித்தெடுத்த தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

கலாத்தியர் அதி: 04 – 05

**"குருடனை வழிதப்பச்செய்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்."**

(உபாகமம் 27:18)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற தேவன் **இயேசுகிறிஸ்துவின் மகிமை நிறைந்த நாமத்தில் இன்றைய தினம் அதிர்ஷ்டத்துடன் கூடிய நல்ல நாளாக அமையுமாறு வாழ்த்துகின்றேன்.** பரலோகத்தையும், பூலோகத்தையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவ பிதாவின் சுவீகாரப் புத்திரர்களாய் உலகில் வாழும் ஜனங்கள் மத்தியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கிறோம் என்று நாங்கள் கூறினால் **மனிதர்கள் அதை விசுவாசிக்க மாட்டார்கள். ஆயினும் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக**!

தேவ பிள்ளைகளே! பரலோக தகப்பனாகிய பிதாவானவரால், நாம் அவருடைய சொந்த ஜாதியாக அழைக்கப்பட்டவர்-களாயிருக்கிறோம். அவர் எம்மிடம் எந்த விசாரனையும் செய்யாதபடி எம்மை **அவரது சுயதீர்மானத்தின்படி தெரிந்துக் கொண்டார்** என்பதை **வேத வசனங்கள் மிகத்தெளிவாக** எடுத்துரைக்கிறது. அவருடைய இராஜ்யத்தின் வேலை நிமித்தமாக அவர் என்னை தெரிந்துக் கொண்டார். நான் இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டு தேவ பிள்ளையாக இருந்த போது என் வாழ்க்கையின் தேவைகள் நிமித்தம் என் உள்ளத்தின் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளுமாறு வெளிநாட்டுக்கு கடந்து செல்ல முயற்சிகளை மேற் கொண்டேன். இச் சந்தர்ப்பத்தில் ஒரு நாள் **என் கனவிலே இயேசு தோன்றி மகனே இலங்கையில் அநேக ஜனங்கள் மிகத் துன்பத்தில் ஜீவிக்கிறார்கள். அவர்களுக்கு ஊழியம் செய்யும்படியாக நான் உன்னை தெரிந்துக் கொண்டேன் என்றார்.** அதற்கு நான் வெளிநாட்டிற்கு போய் உழைத்து பணத்தை கொண்டு வந்து ஊழியம் செய்கிறேன் என்றேன். அதற்கு அவர் நீ வெளியூர் சென்றால் பாவத்தில் விழுந்து போவாய் மறுபடியும் பாவியாக மாறாமல் என் ஊழியத்தைச் செய் என்றார்.

தேவ பிள்ளைகளே! உலகத்திலே பாவியாக ஜீவித்த என்னை அவர் தெரிந்தெடுத்து என் பாவ வாழ்க்கையை மாற்றியமைத்து என்னை **அவரது சுவீகாரப் புத்திரனாக மாற்றியது நான் அவரது ஊழியக்காரனாக பரலோக இராஜ்யத்திற்குரிய காரியங்களை செய்யும்படியாகவே என்று இப்போது நன்கு புரிந்துக் கொண்டேன்.** அவரது குரலுக்கு செவி கொடுத்து, அவரது கட்டளைக்கு கீழ்படிந்த என் வாழ்க்கை தற்போது சகலவற்றிலும் உயர்வடைந்துள்ளது. அதே போல் தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களாகிய நீங்களும் அவர் வார்த்தைகளுக்கு கீழ்படிந்து உங்கள் வாழ்க்கையில் அவரது காரியங்களை செய்ய வாஞ்சித்தீர்களானால் அவரது வழிகளில் நடக்கும் உங்களை அபரிமிதமாக ஆசீர்வதித்து வழி நடத்த அவர் வல்லமையுள்ளவராகயிருக்கிறார். ஆகையால் அவரது கட்டளைகளை வாழ்வில் கைக்கொள்ளுங்கள். **அநேக ஆசீர்வாதங்களை சுவீகரித்து உரிமையாக்கிக் கொள்ளுங்கள். ஜெயத்தின் நாள்**!

**ஜெபம்**

அப்பா பிதாவே! என் அருமை இரட்சகரே! என்னை உங்கள் பிள்ளையாக மாற்றிக் கொண்டவரே நான் நடக்க வேண்டிய வழிகளை உங்கள் கட்டளைகள் மூலம் அறியத்தந்தவரே! உங்கள் கட்டளையின்படி ஜீவிக்க எனக்கு உங்கள் கிருபையை தந்தருளமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நீ உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொண்டு, அவர் வழிகளில் நடக்கும்போது, கர்த்தர் உனக்கு ஆணையிட்டபடியே, உன்னைத் தமக்குப் பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார்." (உபாகமம் 28:9)

ஜீவ மன்னா
நவம்பர் 21
வெள்ளி

## பரிதாபமான ஜனங்களை நித்தமும் தேற்றும் தேவ கிருபை !

இன்றைய வேதவாசிப்பு
கலாத்தியர் 06
எபேசியர் 01

**"...அப்பொழுது அவர் அவனை அழைத்து, சொஸ்தமாக்கி, அனுப்பிவிட்டு, "**
(பரி.லூக்கா 14:4)

இப் பூமியில் வாழ்வது தேவ கிருபை ஜீவனுள்ளோர் தேசத்தில் இருக்கும்படியான கிருபையை பெற்றுக் கொண்ட தேவ ஜனங்களே! ஜீவனுள்ள இயேசுவின் நாமத்தில் இன்றைய நாளிலும் ஜெயம் பெற்றோராய் வாழ வாழ்த்துகின்றேன். ***இயேசுகிறிஸ்து என் மீட்பர் அவரே மெய்யான ஒரே தேவன் என முழு இருதயத்துடன்*** ஏற்றுக் கொண்டு அவரை பின்பற்றும் ஆராதிக்கும் நாங்களனைவரும் உலகத்தை ஜெயம் கொண்டவர்களாவோம். ஆகவே என் அன்பான பிள்ளைகளே நீங்கள் உள்ளம் கலங்க தேவையில்லை. ***உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!***

தேவ பிள்ளைகளே! எங்கள் மீட்பின் கன்மலையாகிய தேவாதி தேவன் எங்கள் யாவருக்கும் ***கர்த்தரானவர்*** அவரது சொந்த பிள்ளைகள், அவரால் உண்டாக்கப்பட்ட பிள்ளைகள் உரிமையுடன் அவரண்டை வந்து அவருடன் உறவாடி தம் தேவைகளைக் கேட்டு பெற்றுக் கொள்ளும் எங்களை அவர் விரும்புகிற தேவனாயிருக்கிறார். ***மனுப்புத்திரனாக தேவ மகனாக*** இப் பூமியில் அவதரித்தவராய் இருக்கிறபடியால் தம்மை நாடி வரும் ஒருவரையும் நிராகரித்து அவர் புறம்பே தள்ளி **கை விடுகிறதில்லை.** யாரையும் புறம்பே தள்ளாத தேவனவர். உதாரணமாக சொல்கிறேன் எனது சிறிய பேத்தி தன் தாயுடன் **தேவாலயத்திற்கு வரும் போதெல்லாம்** என்னிடம் மிக அன்பு ஓடி வந்து தாத்தா என்று அழைத்து ஏதாவது ஒரு பொருளைக் கேட்பாள். அவள் விரும்பி என்னிடம் கேட்கும் பொழுதெல்லாம் அதை அவளுக்கு கொடுக்குபடியாகவே பிரயாசப்படுவேன். காரணம் அவள் என் வம்சத்திலே என் உரிமையுள்ள பிள்ளையாக இருப்பதாலும், ***நான் அவளை அதிகமாக நேசிக்கிறபடியினால் அவளை மகிழ்ச்சிபடுத்தும்படியாகவே*** இப்படியாக செய்கிறேன். அதே போல் எங்கள் அன்பான பிதாவான இயேசுகிறிஸ்துவும் அப்படியே கிரியை செய்கிறவராகவும், எங்களுக்காக அவர் பெரிய காரியங்களை செய்கிறவராயிருக்கிறார். அவர் எம்மீது கொண்ட அன்பின் நிமித்தமாக மகா புதுமையான காரியங்களை செய்ய ஆவலாயிருக்கிறார் அல்லவா? என ***சிந்தித்து*** பாருங்கள்.

தேவ பிள்ளைகளே! இன்று எமது செய்தியின் தலைப்பில் தேவ வசனத்தில் கூறும் சம்பவம் ஒரு ஓய்வு நாளன்று இயேசுகிறிஸ்து ***நீர் கோவை என்னும் வியாதிஸ்தனை சுகமாக்கியதை*** குறித்தேயாகும். ஒரு ஓய்வுநாளில் பரிசேயரின் தலைவனாகிய ஒருவனுடைய வீட்டில் அவர் போஜனம் பண்ணும்படியாக போயிருந்தார். ***அப்பொழுது நீர்கோவை வியாதியுள்ள ஒரு மனிதன் அவருக்கு முன்பாக இருந்தான். அப்போது அவர் அவனை அழைத்து குணமாக்கி அனுப்பினார்.*** அவரை குறைக் கண்டு பிடிக்கும்படியாக கவனித்துக் கொண்டிருந்த நியாயசாஸ்திரிகளையும், பரிசேயரையும் குறித்து எண்ணாமல் வியாதியஸ்தனை இயேசுகிறிஸ்து குணமாக்கினார். அதேபோல் இன்றும் நீங்களும் நோயோடு, வேதனையோடு, கண்ணீரோடு, துன்பத்தோடு வரும் வேளையில் உங்களையும் சொஸ்தமாக்கி குணப்படுத்த அவர் ***கிருபையுள்ளவராய்*** இருக்கிறார். அதேபோல் இன்றும் உங்களைக் ***கைவிடாதபடி*** காக்கும் கேடகமான தேவன் உங்களோடிருக்கிறார். உங்கள் வாழ்வில் ஒரு போதும் தோல்வியேயில்லை, என்றும் வெற்றி நிச்சயமே! ***இன்று ஆசீர்வாதமான ஜெயத்தின் நாள்!***

ஜெபம்

அன்பின் தேவனே! உம்முடைய பிள்ளைகள் துன்பத்தில் வாழும் போது அவர்களுக்கு துணையாயிருந்து அவர்களுடைய நோய்களையெல்லாம் சொஸ்தமாக்கி, கண்ணீரைத் துடைத்து ஆறுதல் அளிப்பவரே உமக்கு நன்றி! இன்னும் அநேகருக்கு சுகம், ஆறுதல் சமாதானம் கிடைக்க வேண்டுமென ஜீவனுள்ள இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"சிறுமையும் எளிமையுமானவர்கள் தண்ணீரைத் தேடி, அது கிடையாமல், அவர்கள் நாவு தாகத்தால் வறளும்போது, கர்த்தராகிய நான் அவர்களுக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேலின் தேவனாகிய நான் அவர்களைக் கைவிடாதிருப்பேன்." (ஏசாயா 41:17)

ஜீவ மன்னா

நவம்பர் 22 சனி

# உங்கள் உள்ளம் கருணை நிறைந்த உள்ளமா?

இன்றைய வேதவாசிப்பு

எபேசியர் அதி: 02 – 03

**"அதற்கு அவன்: அவனுக்கு இரக்கஞ் செய்தவனே என்றான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீயும் போய் அந்தப்படியே செய் என்றார்"**

(பரி.லூக்கா 10:37)

தேவ அனுக்கிரகத்தினால் தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்ட என் அருமையான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற என் ஆத்தும நேசர் **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் மகிழ்ச்சிக்குரிய நல்ல நாளாக வேண்டுமென இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகின்றேன்.** எம் மத்தியில் ஜீவிக்கும் தேவனாகிய இயேசு எம்மீது வைத்திருக்கும் அன்பு அளவு கடந்ததாய் இருக்கிறது. அதேபோல் அவர் எமக்கு காட்டும் கிருபையும் அளவிட முடியாததாய் உள்ளது. **அவர் எம்மீது இவ்வளவாய் அன்புக் கூர்ந்து அவரது சொந்த மகனாக, மகளாக தெரிந்துக் கொண்டார்** அவரைப் போலவே நாமும் மற்ற மனிதர்களை நேசிக்க வேண்டும், மற்ற மனிதர்கள் மீது அன்பு செலுத்தி, கருணை செய்ய வேண்டுமென்பதே **அவர் எம்மிடம் எதிர்பார்க்கும் தேவனாயிருக்கிறார்.** நாமும் அவரைப் போல் மற்றவர்களுக்கு அன்பு செலுத்த வேண்டுமென்று அவருடைய விருப்பமாயிருக்கிறது.

எனக்கருமையானவர்களே! எமது இன்றையச் செய்தியின் தலைப்பின் வசனமானது **பரி.லூக்கா 10:37**இல் "நல்ல சமாரியனின் இரக்க குணத்தை வெளிப்படுத்துகிறது. ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்கு போகையில் கள்வர் கையில் அகப்பட்டான். அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துக் கொண்டு அவனைக் காயப்படுத்தி குற்றுயிராக விட்டுப் போனார்கள். அப்பொழுது தற்செயலாக ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து அவனைக் கண்டு பக்கமாய் விலகிப் போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் வந்து அந்த இடத்திலே அவனைக் கண்டு விலகிப் போனான், பின்பு ஒரு சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில் அவனைக் கண்டு மனதுருகி அவனண்டையில் வந்து அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து காயங்களைக் கட்டி அவனைத் தன் சுய வாகனத்தில் மேல் ஏற்றி சத்திரத்திற்கு கொண்டு போய் அவனை பராமரித்தான்." மறு நாளிலே தான் புறப்படும் போது பணத்தை எடுத்து சத்திரத்தான் கையில் கொடுத்து நீ இவனை விசாரித்துக் கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காக செலவழித்தால் நான் திரும்பி வரும் போது அதை உனக்குத் தருவேன் என்றான்.

தேவ பிள்ளைகளே! இந்தக் காரியங்களை வெளிப்படுத்திய தேவன் தன்னிடம் நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்ட மனிதனிடம் அவர் கள்வர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்று பேரில் எவன் பிறானனாயிருக்கிறான் உனக்கு எப்படி தோன்றுகிறது என்றார். அதற்கு அவன் அவனுக்கு இரக்கஞ் செய்தவனே என்றான். **அப்பொழுது இயேசு அவனை நோக்கி நீயும் போய் அந்தப்படி செய் என்றார். இயேசுகிறிஸ்து எதிர்பார்க்கும் இந்த இரக்கம் நிறைந்த இருதயம் உங்களுக்கு இருக்கிறதா? இல்லாவிட்டால் தேவனிடம் கேட்டு பெற்றுக் கொள்ளுங்கள்.** ஏனெனில் அவர் கிருபை நிறைந்தவராய் இருக்கிறபடியால் நாமும் அவரைப் போலவே இரக்க சிந்தை உள்ளவர்கள், மற்றவர்களுக்கு உதவிபுரியும் அன்பு உள்ளவர்கள், மற்றவர்கள் துன்பத்தில் மனதுருக்கம் உள்ளவர்களாய் ஆறுதல் அளிப்பவர்களாய் இருக்க வேண்டும் என்பதே அவர் எம்மிடம் **எதிர்பார்க்கும் குணயியல்புகள் ஆகும்.** நாமும் அவரை போல் மாறுவோம். அவருக்கு பாத்திரவான்களாய் நடப்போம் அவர் ஜீவனுள்ளவராய் எம்மோடிருக்கிறார். **தேவ ஆசீர்வாதத்தின் கிருபையின் நாள்!**

ஜெபம்

எனகன்பான தேவனே! உங்கள் மாறாத கிருபைக்காக உமக்கு நன்றி! நானும் உங்களைப் போன்று மனதுருக்கத்துடன் மற்றவர்களுக்கு கருணை செய்ய உங்களைப் போல கருணையான உள்ளத்தை தந்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நன்மைசெய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே."
(நீதிமொழிகள் 3:27)

ஜீவ மன்னா
நவம்பர் **23**
ஞாயிறு

## துர்செய்திகளுக்கு பயப்படாத இருதயம் தேவனை நம்பித் திடனாயிருக்கும் !

இன்றைய வேதவாசிப்பு
எபேசியர்
அதி: 04 – 05

**"துர்ச்செய்தியைக் கேட்கிறதினால் பயப்படான்; அவன் இருதயம் கர்த்தரை நம்பித் திடனாயிருக்கும்."** (சங்கீதம் 112:7)

தேவனுக்குள் பிரியமான அன்பு தேவ பிள்ளைகளே! உதிக்கும் இக் காலைப் பொழுதினிலே எம்மை நேசிக்கும் **இயேசுகிறிஸ்துவின் ஜீவனுள்ள நாமத்தைக் கொண்டு சகல சௌபாக்கியங்களும் இன்று உங்களை வந்தடையுமாறு வாழ்த்துகின்றேன்.** இப் புதிய தினத்திலும் இயேசுகிறிஸ்துவின் அருளை பொழியும். அன்பு வார்த்தைகள் அடங்கிய செய்தியோடு உங்களை சந்திக்கின்றேன். **தேவன் அருளும் எல்லா வார்த்தைகளும் நற்சாந்தம் நிறைந்ததே.** நாள் தோறும் அவரின் அருள் வாக்கு **எம் ஆத்துமாவை போஷிக்கிறதாய் இருக்கிறது. உங்கள் ஆத்துமா சோர்வுற்று பெலன் குறைந்திருந்ததால் வசனம் எம்மை அனல் கொள்ளச் செய்யும்.**

தேவ பிள்ளைகளே! தற்கால உலக நிகழ்வுகளின்படி அதிகமான தேசங்களில் கொடூரமான கிரியைகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது. **ஈராக் என்னும் நாட்டில் கிறிஸ்தவர்களை படுகொலை செய்யும் ஒரு பிரிவினரைக் குறித்து நாம் அறிந்துக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது.** இது மிகவும் வேதனைக்குரிய காரியமாகும். யுத்தத்தினால் மாத்திரமல்ல, இயற்கையின் அழிவாகிய வெள்ளப்பெருக்கு, பூமியதிர்ச்சி புயல் இவைகளினால் அழியும் மனித உயிர்கள் எண்ணிக்கையில் அடங்காததாக இருக்கிறது. இவைகளை உலகச்செய்தி நிலையங்களுக்கூடாக காண்கிறோம், கேட்கிறோம், வாசிக்கிறோம் அல்லவா? இவைகள் வேகமாக செயற்படுகின்றது தேவ ஜனங்களே! ஆனாலும் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக**! ஏனெனில் இன்றைய தேவ செய்தியின் ஆரம்ப வசனம் **சங்கீதம் 112:7**இல் "துர்ச்செய்தியைக் கேட்கிறதினால் பயப்படான் அவன் இருதயம் கர்த்தரை நம்பித் திடனாயிருக்கும்" என்றும் அது மாத்திரமல்ல **சங்கீதம் 112வது அதிகாரம் 1ம் முதலாம் வசனத்திலிருந்து கடைசி வரையிலும் உள்ள வசனங்கள் தேவனுக்கு பயப்படுகிறவர்கள் பாக்கியவான்களென்றும் அவர்கள் நீதிமான்களாய் இருந்து தேவன் மீது விசுவாசம் கொண்டவர்களாய் இருப்பதால்,** கர்த்தரிடமிருந்து அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டவர்களாய் இருக்கிறார்கள் என தேவனுடைய வார்த்தைகள் கூறுகிறது.

தேவ பிள்ளைகளே! **நீங்கள் தினந்தோறும் தேவ பாதத்தில் அமர்ந்து ஜெபித்து உங்கள் உள்ளத்தை தேவ ஆவியானவரின் வல்லமையால் நிரப்பச் செய்து பெலப்படுத்திக் கொள்ளுங்கள்.** தேவ ஆவியானவரால் உள்ளம் பெலப்படாமல் சோர்வடைந்து போகும் சமயங்களில் உங்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் உங்கள் வாழ்வில் நேரிட்டால் நீங்கள் பிரச்சனையைக் கண்டு பயந்து விடுவீர்கள். ஆனால் தேவ ஆவியானவரால் உங்கள் உள்ளம் பெலப்பட்டிருக்குமானால் என் தேவன் என்னோடிருக்கிறார் என்று தேவன் மீது விசுவாசம் கொண்டு நீங்கள் ஜீவிப்பீர்களானால் **நீங்கள் எதற்கும் அஞ்ச வேண்டாம். ஏனெனில் உங்கள் இருதயம் தேவனுக்குள் ஸ்திரப்பட்டிருக்கிறபடியால்.** ஜெப வேளைகளை அதிகரிக்கச் செய்து உள்ளம் தேவனுடன் நிரந்தரமான ஐக்கியத்தில் தரித்திருக்கும் படியாக ஆவியால் நிரம்பியிருங்கள். **இன்று உங்களுக்கு ஜெயம்**!

**ஜெபம்**

என் அன்பின் தேவனே! கடைசி காலத்திலே அநேக துர்செய்திகளை காண்கிறோம், கேட்கிறோம். ஆனாலும் நீர் எங்களை பெலப்படுத்தி துர்க்கிரியைகளுக்கு எம்மை விலக்கி காத்தருளும். நித்தமும் உமது பாதம் தரித்திருந்து ஜெபிக்க கிருபை செய்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

**வேத வாக்குத்தத்தம்**

"நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை." (பரி.யோவான் 10:28)

ஜீவ மன்னா

நவம்பர் 24

திங்கள்

# உங்கள் எதிராளிக்கு விரோதமாக அசைக்கும் தேவக்கரம் !

இன்றைய வேதவாசிப்பு

எபேசியர் 06

பிலிப்பியர் 01

**"இதோ, நான் என் கையை அவர்களுக்கு விரோதமாக அசைப்பேன்;..."**
(சகரியா 2:9)

அருமையான என் தேவ பிள்ளைகளே! **நித்திய ஜீவனைப் பெற்று இரட்சிப்பில் மகிழ்ந்திருக்கும் உங்களை இன்றைய தினத்திலும் ஜீவனுள்ள தேவனின் நாமத்தினால் வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.** எங்கள் தேவனாகிய சர்வ மகிமைக்குரியவரின் வார்த்தைகள் சத்தியமானவைகள் மாத்திரமல்ல இன்று செயல்படுகிற ஜீவனுள்ள வார்த்தைகளாய் இருக்கிறது. என்பதை நாம் அறிகிறவர்களாய் இருக்கிறோம். அவருடைய வார்த்தைகள் **எமக்கு சந்தோஷமும், மகிழ்ச்சியுமாகும். வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடமிருந்து எனக்கு ஒத்தாசை வரும் என்று எழுதப்பட்டுள்ள வேதவாக்கியத்தின்படி இன்றும் எமக்கு ஒத்தாசை வரும் தேவனிடமிருந்தே வருகிறது.**

தேவ பிள்ளைகளே! நீங்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதின் நிமித்தம் குடும்ப அங்கத்தினர்கள், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் **இவர்கள் மத்தியில் நீங்கள் புறக்கணிக்கப்படுகிறீர்களா? உங்களை நிந்தித்து அவமதிக்கிறார்ர்களா? நீங்கள் பயப்படாதீர்கள், அதைரியப்படாதீர்கள். யார் உங்களை விலகிப் போனாலும் உங்களை தனிமையில் வாட தேவன் விடமாட்டார்.** தேவன் உங்களுக்கு அனுசரணையாக, அடைக்கலமாக உங்களோடிருப்பார். உங்களுக்கு உதவி தேவைப்படும் போது அருகில் வந்து ஒத்தாசை செய்வார். உங்கள் இருதயம் கசந்து நொந்து மனக்கிலேசத்துடன் இருப்பீர்களாயின் உங்களை மிகவும் அண்மித்து அன்போடு அரவணைத்துக் காத்துக் கொள்வார். மனிதர்கள் **உங்களுக்கு விரோதமாக எழும்பும் போது அவர் உங்கள் பக்கமாய் இருப்பார்.** உங்களை உங்களின் பட்சத்தில் இருக்கும் மனிதர்கள் உங்கள் விரோதிகளுக்கு துணை நின்று உங்களின் அன்பான நண்பர்களாக் காட்டி இரகசியமாக உங்களுக்கு விரோதமாக செயல்பட்டு சூழ்ச்சிகள் செய்யும் போது தள்ளி விழச் செய்து, அழிக்குமாறு கிரியை செய்யும், ஆலோசனை செய்யும் உங்கள் எதிராளிகளுக்கு விரோதமாக கையை அசைப்பேன். **சகரியா 2:9**இல் கூறியிருப்பதை இன்றைய எமது தலைப்பு வசனத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆகையால் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!**

அன்பார்ந்தவர்களே! இரு மனிதர்கள், அல்லது இரண்டு பெண்கள் ஒருவருக்கொருவர் விரோதமாக சண்டையிடும் போது ஒருவர் நண்பனோ, நண்பியோ இடையிட்டு நிறுத்தி சமாதானப்படுத்த உதவி செய்யலாம். ஆனால் தேவாதி தேவன் **ஒரு மனிதனுக்கு விரோதமாக கை அசைத்தால் அவனுக்கு என்ன நேரிடும்?** அவனுக்காய் பரிந்து பேச யாரால் கூடும்? என்று சிந்தித்துப் பாருங்கள். அவர் பராக்கிரமம் உள்ளவர் ஆகையால் நாம் எப்போதும் அவரையே பற்றிக் கொள்ள வேண்டும். ஆகையால் **எங்கள் பகையாளிகளுக்காக ஜெபிக்க வேண்டும். அவர் உங்கள் பட்சத்தில் இருக்கிறார். நீங்கள் எதற்கும் பயப்படாதிருங்கள்! உங்களுக்கு ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

என் அன்பான இயேசுவே! நீங்கள் என் பட்சத்தில் இருக்கிறபடியால் ஸ்தோத்திரம். எனக்கு விரோதமாய் எழும்புவர்கள் மீது உங்கள் கை அசைக்கப்படுகிறது. இன்றும் என் விரோதியிடமிருந்து என்னை மீட்டருளும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை." (யோசுவா 1:5)

ஜீவ மன்னா
நவம்பர் 25
செவ்வாய்

# சோர்ந்து போன எமக்கு பெலன் தந்து சத்துவமளிக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
பிலிப்பியர்
அதி: 02 – 03

**"சோர்ந்துபோகிறவனுக்கு அவர்பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்."**
(ஏசாயா 40:29)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! விண்ணுக்கும், மண்ணுக்கும் சொந்தக்காரரும் மரித்து உயிரோடிக்கிறவருமான ***ஜீவனுள்ள வல்லமையின் தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய தினம் உங்களுக்கு மிக மகிழ்ச்சிக்குரிய நாளாக விளங்குமாறு வாழ்த்துகின்றேன்.*** இலங்கை தேசத்தில் எம் வாசக' நேயர்களாக விளங்கும். தேவ பிள்ளைகளே! மத்தியிலும் வெளித்தேசங்களில் தொழில் நிமித்தமாக தங்கி வாழும் தேவ பிள்ளைகள் மத்தியிலும் தினந்தோறும் இதமான காலை பொழுதினில் சந்தித்து உறவாடும்படியாக எமக்களித்திருக்கும் இம் ***ஜீவ மன்னா தினசரி தியான இதழின் மூலமாக தேவனுக்கு மகிமை உண்டாவதாக!*** ஒவ்வொரு நாளும் உங்களை சந்திப்பதில் தேவன் ஆவலாயிருக்கிறார். அவர் உங்களை நேசிக்கிறபடியால் உங்கள் ஆத்துமாவைக் குறித்து உங்களைப் பார்க்கிலும் ***அவர் மிக அக்கறையுள்ளவராக இருக்கிறார்.***

தேவ பிள்ளைகளே! இன்றைய தலைப்பு வசனம் **"சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார்."** என்று கூறுகிறது. உங்கள் ஆத்தமா சோர்ந்து போய் இருக்கிறதா? சத்துவமில்லாமல் இருக்கிறீர்களா? உங்களை தேவன் இன்றைய தினம் பெலப்படுத்தவும், பெருகப் பண்ணவும் வல்லமையுள்ளவர் ஆகையால் ***உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!*** உதாரணமாக ஒரு விளையாட்டுப் பயிற்சியில் பங்கேற்கும் விளையாட்டு வீரன் மிக நேரம் பயிற்சி செய்யும் பொழுது சரீரம் சோர்வடைந்து பெலனற்று காணப்படும். அப்பொழுது "குளுகோஸ்" எனப்படும் ஊக்கப்படுத்தக்கூடிய பானம் கொடுக்கும் போது மறுபடியும் அச்சரீரம் பெலனடையும். அதேபோல் எமது ஆத்துமாவும் அநேக காரியங்கள் நிமித்தம் சோர்விற்கு பெலனின்றி போகிறதுண்டு. இப்படியாக ***ஆத்துமா சோர்ந்து இருக்கும் போது நாம் மறுபடியுமாக புதுபெலனால் நிரப்பப்படுவது அவசியமாகிறது.***

தேவ பிள்ளைகளே! எமது ஆத்துமாவை பெலப்படுத்துவது தேவனுடைய வார்த்தைகள் ஆகும். ***அவருடைய வாக்குத்தத்தங்களை தியானித்து தேவனை பிரஸ்தாபப்படுத்தும் போது தேவ ஆவி எமக்கு புது பெலனளித்து புது பாதையில் வழி நடத்துபவராய் இருக்கிறார்.*** தேவன் என்னோடு பேசவில்லையே என்று கூறாதிருங்கள். தேவன் மனிதர்களைப் போல் பேசிக் கொண்டிருப்பவர் அல்ல என்பதை கருத்தில் கொள்ளுங்கள். விளையாட்டு வீரன் களைப்படைந்து போகும் போது அவனுக்கு ஊக்கமளிக்கும்படி "குளுகோஸ் பாணம்" கொடுக்கப்படுகிறது. களைப்படைந்து போகும் போது குளுகோஸ் தேவைப்பட்டது. அதே போல் ***உங்கள் ஆத்துமா சத்துவமில்லாமல் சோர்ந்து போகும் வேளையில் தேவ வாரர்த்தைகளைக் கொண்டு பெலப்படச் செய்வார்.*** பிள்ளைகளே! இதைக் குறித்து நீங்கள் அதைரியப்படாதீர்கள்! பிரச்சினை, நோய், கஷ்டங்களினால் உங்கள் ஆத்துமா சோர்வுறாதவாறு தேவன் உங்களை பெலப்படுத்தி, ***உங்கள் சத்துவத்தைப் பெருகப் பண்ணுவார். வெற்றியின் நாள்!***

**ஜெபம்**

பரிசுத்தமான என் தேவனே! உங்கள் வார்த்தைதள் வல்லமையும், ஜீவனுள்ளதாயும் இருக்கிறது. அனுதினமும் நான் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய வேளை உம் வார்த்தைகளுக்கூடாய் பெலப்படுத்தியருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்."
(ஏசாயா 40:31)

ஜீவ மன்னா

நவம்பர் 26

புதன்

# தேவனின் மாறாத அன்பை வெளிப்படுத்தும் இயேசுகிறிஸ்து !

இன்றைய வேதவாசிப்பு

பிலிப்பியர் 04
கொலோ: 01

"இயேசு கண்ணீர் விட்டார்." (பரி.யோவான் 11:35)

பிரியமான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற தேவனாகிய **இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் இன்றைய தினத்திலும் இனிதே வாழ வாழ்த்துகின்றேன்.** இவ்வுலகத்திலே உண்மையான தெய்வம் என்று ஒருவர் இருக்கிறாரா? அவர் யார் என தேடிக் கொண்டிருந்த எம்மை பரமண்டலங்களிலே இருந்து செயல்புரியும் ஜீவனுள்ள ஒரு தெய்வம் உண்டோ! **அவரே எம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து என்று அறியும்படி நேர்ந்தது எமது பாக்கியமே!** நாங்கள் அவரை குறித்து அறியாதிருந்தாலும் அவர் தாயின் வயிற்றிலே எம்மை தெரிந்துக் கொண்டு **தமது குமாரன் இயேசுகிறிஸ்து மூலமாக தம்மை வெளிப்படுத்தினார்.**

அன்பார்ந்தவர்களே! எமது பரலோக பிதாவான தேவன் அவரது **பிள்ளைகள் மீது எவ்வளவு அன்பு கொண்டிருக்கிறார். என்பதை இப்படியாக எமக்கு கூறுகிறார்.** அவருடைய குமாரனாக இவ்வுலகிற்கு வந்தது தனது பரலோக குமாரனில் வெளிப்படுத்தினார். **தேவன் மனிதர்களை எவ்வளவாய் நேசித்தார்.** என்பதை விளக்குவதாகவே இன்றைய செய்தியின் தலைப்பு வசனம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பெத்தானியா என்னும் ஊரில் லாசர், மார்த்தா, மரியாள் என்னும் பெயர்களைக் கொண்ட மூன்று சகோதர, சகோதரிகள் வாழ்ந்தார்கள். அவர்கள் **தேவ பிள்ளைகளாக இயேசுகிறிஸ்துவை மிகவும் நேசிக்கிறவர்களாக இருந்தார்கள்.** அதே போல் இயேசுவை அக் குடும்பத்தை மிகவும் நேசித்தார். என்பதை வேத வசனம் வெளிப்படுத்துகிறது. **இயேசு மார்த்தாளிடத்திலும் அவளுடைய சகோதரியினிடத்திலும், லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார்.** ஒரு நாள் ஆண்டவரே! நீர் சிநேகிக்கிறவன், வியாதியாயிருக்கிறான் என்று சொல்ல அவரிடத்தில் ஆள் அனுப்பினார்கள். இயேசு அதைக் கேட்ட பொழுது இந்த வியாதி மரணத்திற்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது. **தேவனுடைய குமாரனும் அதனால் மகிமைப்படுவார் என்றார். தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டு நாள் தங்கினார். அதன் பின் தன் சீஷரோடு யூதேயாவுக்கு புறப்பட்டுப் போனார்.**

தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்து **பெத்தானியா ஊருக்கு கடந்து சென்ற போது லாசர் மரித்து நான்கு தினங்களாகியிருந்தது.** அவர் இப்படி காலம் கடந்து அவ்விடம் சென்றது தேவ சித்தம் நிறைவேறும்படியாகவே **மரித்த லாசருவை மறுபடியும் உயிரோடு எழும்பச் செய்யும்படியாகவே அவர் அந்த சகோதரிகளுடைய கண்ணீரைக் கண்டார். இயேசு கண்ணீர் விட்டார்.** என வேத வசனங்கள் உரைக்கிறது இப்படியான காரியங்கள் பெத்தானியாவிலே நிறைவேறியது. இயேசுகிறிஸ்து அவர்களை மிகவும் நேசித்தபடியாலே, அன்று தமது பிள்ளைகள் மீது அவர் கொண்ட அன்பு **இத்தகைய மகா அற்புதத்தை செய்ய வைத்தது போலவே இன்றும் அவரின் அன்பு அவரது பிள்ளைகள் மத்தியில் குறைவுபடாததாயிருக்கிறது.** அவர் இன்றும் ஜீவனுள்ளவராய் எம் மத்தியில் வாசம் பண்ணுகிறார். **நன்மை நிறைந்த ஆசீர்வாதமான நாள்!**

ஜெபம்

என்னை நேசிக்கும் அருமையான இயேசுவே! உங்கள் மகா அன்பை இயேசுகிறிஸ்வின் மூலமாக வெளிப்படுத்தியமையால் நன்றி! உங்கள் அன்பிலே நிலையான தாய் அன்பு இருப்பதை நான் உணர்கிறேன் கர்த்தாவே! உங்களை நான் விசுவாசிக்கிறேன். இன்றும் உங்கள் மாறாத அன்பை வெளிப்படுத்தும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது."
(பரி.யோவான் 10:29)

ஜீவ மன்னா
நவம்பர் 27
வியாழன்

# காணாமல் போன ஆட்டைத் தேடும் நல்ல மேய்ப்பன் !

இன்றைய வேதவாசிப்பு
கொலோ: அதி: 02 – 03

**"...ஒரு மனுஷனுக்கு நூறு ஆடுகளிருக்க, அவைகளில் ஒன்று சிதறிப் போனால், அவன் மற்றத் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைகளில் விட்டுப் போய்ச் சிதறிப்போனதைத் தேடாமலிருப்பானோ?"**
(பரி.மத்தேயு 18:12)

தேவ அன்பான தேவ பிள்ளைகளே! ஆகாயம், பூமி கடல் யாவற்றையும் விட பரந்த அன்புக் கொண்டவரான **எம் ஜீவனுள்ள தேவனின் நாமத்தினால் இன்றைய நாள் மனமகிழ்ச்சி நிறைந்ததாயிருக்கும்படி வாழ்த்துகின்றேன்.** அன்பு, பாசம், நேசம் போன்ற உணர்வுகளை எம் உள்ளத்தில் வைத்தவர் எம்மை படைத்த தேவன். ஏனெனில் **அவர் அன்பே உருவானவர்** அவரின் இந்த அன்பு எமது ஆத்துமாவும், தேவனுடைய ஆத்துமாவும் இணைகிற **அன்பின் ஐக்கியம் ஆத்துமாவோடு ஆத்துமா இணைகிறதாயிருப்பதால் இதில் சரீரம் சம்பந்தமற்றதாயிருக்கிறது.** தேவ அன்பை குறித்து அறிந்தவர்கள் அவரது **அன்பை ருசித்துப் பார்க்கிறவர்கள்.** அவரோடு இணைந்து அவரது அன்பின் அரவணைப்பில் இணைந்து நடக்கிறவர்கள் **பாக்கியவான்கள்**!

தேவ பிள்ளகைளே! ஜீவ மன்னா தின மஞ்சரி தியானத்திற் கூடாக உங்களை தேவன் சந்திப்பது **அவரது அன்பிற்கு உங்களைச் சமீபித்து கிட்டிச் சேர்த்துக் கொள்ளும்படியாகவும்** எக்காரணத்தைக் கொண்டும் **நீங்கள் பின்மாற்றமடையாதபடி** அவரது அன்பை விட்டு தூரமாகிப் போகாதவாறு உங்கள் உள்ளத்தில் அவருடைய **அன்பின் இணைப்பினை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.** நீங்கள் அனைவரும் தேவனுடைய அன்பைப் புரிந்துக் கொள்ளுகிறவர்களாக இருக்க வேண்டும். தேவ அன்பையும், மனித அன்பையும் சமநிலை படுத்தாதீர்கள். மனிதர்களின் அன்பு இமைப்பொழுது மாறிப் போய்விடும். ஆனால் **தேவனின் அன்பு சதாகாலங்களிலும் மாறாதது.** நீங்கள் பின்மாற்றத்திற்குள்ளாகி விட்டீர்களா? நீங்கள் அவரை நோக்கி ஆண்டவரே இயேசுவே என அவரை அழைத்தீர்களானால் **அவர் ஒரு நாளும் உங்களை கைவிடவோ, மறக்கவோ மாட்டார்.** அவர் எப்போதும் தம் பிள்ளைகளை நோக்கி பார்த்துக் கொண்டேயிருக்கிறார். அவரது அன்பு அளவிட முடியாத அன்பாயிருக்கிறது.

தேவ பிள்ளைகளே! **பரி.மத்தேயு 18:12**இன்படி "மேய்ப்பன் நூறு ஆடுகளில் ஒரு ஆடு மந்தையை விட்டு விலகி காணாமல் போனால் தன்னிடம் உள்ள ஆடுகள் விட்டு, விட்டு அந்த ஆட்டை தேடி மலைகளில் போவது போல்" உங்கள் படைப்பின் கர்த்தர் அதைவிட எவ்வளவு அக்கறையுடன் உங்களைத் தேடுவார். **நீங்கள் எவ்வளவு பின் மாற்றத்திற்குள்ளாகி இருப்பினும் உங்களைக் குறித்து அவருடைய கண்கள் நோக்கமாயிருக்கிறது.** அனைவரையும் ஒரே மாதிரியாக நேசிக்கிறார் **அவரது அன்பு தராதிரத்தை பாராது** நீங்கள் அழிந்து போகாதபடி அவரது அன்பு உங்களை வாஞ்சிக்கும். இன்றும் காணாமல் போன ஆடான **உங்களைக் கர்த்தர் தேடிக் கொண்டிருக்கிறார்.** மறுபடியுமாக உங்களை ஆறுதல்படுத்துவார். ஆதியில் கொண்ட அன்பை உணரச் செய்வார். **தேவனுக்குள் மனந்திரும்பி அவருடன் இணைந்து வாழ்வில் வெற்றியைப் பெற்றுக் கொள்ளுங்கள். இன்றைய மனந்திரும்புதலின் ஆசீர்வாதமான நாள்!**

**ஜெபம்**

என்மீது அளவில்லா அன்பு கொண்ட தேவனே! என் பின்மாற்றத்தினால் உங்களை விட்டு விலகி போன போது என்னை தேடி வந்து என்னை உங்கள் அன்பினால் அரவணைத்து காத்துக் கொள்ள வேண்டுமென இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

**வேத வாக்குத்தத்தம்**

"ஒரு மேய்ப்பன் சிதறுண்ட தன் ஆடுகளின் நடுவே இருக்கிற நாளில் தன் மந்தையைத் தேடிக்கொண்டிருக்கிறதுபோல, நான் என் ஆடுகளைத்தேடி, ...அவைகளைத் தப்பிவரப்பண்ணி,"
(எசேக்கியேல் 34:12)

ஜீவ மன்னா

நவம்பர் 28

வெள்ளி

## உலகில் எம்மை வாழ வைக்கும் இயேசு !

இன்றைய வேதவாசிப்பு

கொலோ: 04

1 தெசலோ: 01

**"இரண்டு நாளுக்குப்பின்பு அவர் நம்மை உயிர்ப்பிப்பார்; மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார்; அப்பொழுது நாம் அவருடைய சமுகத்தில் பிழைத்திருப்போம்."** (ஓசியா 6:2)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவன் **இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இதமான காலைப் பொழுதினில் உங்களை வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன். உங்களை ஜீவ மன்னாவின் மூலமாக சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.** அன்பின் தேவ பிள்ளைகளே! சர்வலோகத்தையும் படைத்து ஆளுகை செய்து நடத்தி வரும் அருபியாக எம்மத்தியில் கிரியை செய்கிறவரும் சர்வ வல்லமை நிறைந்த மகத்துவமான தேவனிடம் விசுவாசம் கொண்டு அவரின் கிருபையைப் பெற்றுக் கொள்ள **அவருடைய கற்பனைகளுக்கு கீழ்படிந்து நல்ல வாழ்வை வாழத்தக்கதாக உங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளச் செய்தது பெரிய பாக்கியமுள்ள காரியம் என சிந்தித்துப் பாருங்கள். எமது தெய்வத்தைப் போல் வேறொரு தெய்வம் இப்பூமியிலே இல்லை என்பது சத்தியம்.**

மேலே தரப்பட்ட வேதவாக்கியம் **ஓசியா 6:2**இல் கூறுகிறது "இரண்டு நாளுக்குப் பின்பு அவர் நம்மை உயிர்ப்பிப்பார். மூன்றாம் நாளில் எழுப்புவார்." அப்போது நாம் அவருடைய சமூகத்தில் பிழைத்திருப்போம் என்று அதன் விளக்கம் என்ன என்று உங்களுக்கு புரிகிறதா? பிள்ளைகளே! **அவர் எம்மை வாழ வைக்கும் தெய்வம் என்பதைத் தெளிவுப்படுத்துகிறது.** ஆகையால் தேவன் உங்களை எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதை எண்ணிப் பாருங்கள். நாங்கள் தேவனுடைய பிள்ளைகளாய் இருந்த போதும் எமது வாழ்க்கையில் **பிரச்சினைகள், துன்பங்கள், துயரங்கள் இல்லையென கூறமுடியாது என்பதை அறிவீரகள்.** ஏனெனில் உலகத்திலிருந்து தமது சந்ததியாக எம்மை மாற்றும்படியாக தெரிந்துக் கொண்டபடியால் உலகத்தில் அநேக உபத்திரவங்கள் உண்டு. என தேவ வசனம் எடுத்துரைக்கிறது. ஆயினும் உலகில் எத்தனை உபத்திரவங்கள் வந்தாலும் எம் இயேசுகிறிஸ்து எம்மோடிருக்கிறார். ஆகையால் சகலவற்றிலும் ஜெயம் கொண்டவர்களாய் இருப்போம். ஏனெனில் **எமது தேவன் உலகத்தை ஜெயம் கொண்டவர்.**

அன்பார்ந்தவர்களே! நாங்கள் பெலவீனப்படும் போது எம்மை பெலப்படுத்தவும் இதயம் வேதனையில் வாடும் போது எம்மை ஆறுதல்படுத்தவும், **எம்மை போஷித்து காத்து வழி நடத்தும் தேவனாயிருக்கிறார்.** அப்படி அவர் செய்வது நாம் அழிவிலிருந்து காக்கப்படும்படியாகவே அவருக்கு முன் நாம் ஜீவிக்கின்றவர்களாய் இருக்கும்படியாகவே இன்றும் **அவர் மாறாதவராயிருக்கிறார். உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனாக இருக்கின்றார். ஆகவே தைரியமாயிருங்கள்! இன்று ஜெயம் தரும் நல்ல நாள்!**

ஜெபம்

என் பிதாவே! பாவியான என்னை இரட்சித்து பாவத்தின் தண்டனையிலிருந்து விடுவித்து பரிசுத்தமானதாக மாற்றிய கிருபைக்காக நன்றி! இன்று உமது கிருபையில் வழி நடத்துமாறு
இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"என் மகனே, கேள், என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்; அப்பொழுது உன் ஆயுசின் வருஷங்கள் அதிகமாகும்." (நீதிமொழிகள் 4:10)

ஜீவ மன்னா
நவம்பர் 29
சனி

# நீதிமான்களை ஒரு போதும் மறவாதவர் !

இன்றைய வேதவாசிப்பு
1 தெசலோ: அதி: 02 – 03

**“நோவாவின் வம்சவரலாறு: நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்.”** (ஆதியாகமம் 6:9)

தேவ கிருபையால் அழைக்கப்பட்டவர்களாகிய தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள **தேவனின் வல்லமையான நாமத்தினால் இன்றைய தினம் அதிர்ஷ்டமான நாளாயிருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** நித்தியமும் அழிவில்லாமையும் அருபியாக இருக்கிறவரான **தேவன் தாமே நீதிமானாக விளங்குகிறார்.** ஆகையால் **அவருடைய பிள்ளைகளாக்கப்பட்ட ஒவ்வொருவரையும் அவர் நீதிமான்களாக மாற்றுகிறார்.** இன்றைய தினம் மேலே தரப்பட்டுள்ள தேவ வாக்கியத்தில் **ஆதியாகமம் 6:9**இல் நோவா எனும் மனிதனைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது.

அன்பார்ந்தவர்களே! தேவ பிள்ளைகளாக, பரிசுத்தவான்களாக மாற்றும்படியாக அவர் எவ்வளவாய் துன்பப்பட்டார். அவரால் படைக்கப்பட்டவர்கள் தேவனுக்கு கீழ்படியாமல் துன்மார்க்கமாய் அநீதியின் வழிகளில் பாவத்திற்கு அஞ்சாதவர்களாய் ஜீவிக்கிறதை நாம் காண்கிறோம். தற்போது மாத்திரமல்ல **நோவா ஜீவித்த நாட்களிலும் அவ்வண்ணமாக ஜனங்கள் வாழ்ந்தார்கள்.** என வேதம் கூறுகிறது தேவன் பூமியைப் பார்த்தார் இதோ **அது சீர்கெட்டதாயிருந்தது.** ஆயினும் உலகத்தோர் மத்தியில் நோவா நீதிமானாக, உத்தமானாக இருந்தான். **நோவா தேவனுடன் சஞ்சரித்துக் கொண்டிருந்தான் எனவும் ஆதியாகமம் 6ம் அதிகாரம் கூறுகிறது.**

தேவ பிள்ளைகளே! பூமியில் சகல மனிதர்களும் அக்கிரமக்காரர்களாய் இருந்த போதும் நோவா அவர்கள் மத்தியில் வாழ்பவராய் இருந்த போதும் கூட அவர்களுடன் பழகாதவரும் அவர்களுடைய காரியங்களில் பங்கு கொள்ளாமலும் இருந்து, **நீதியுள்ளவனாயும், உத்தமனுமாயிருந்தான்.** ஆகையால் தான் பூமியை **தேவன் அழிக்கும்படியாக ஜலப்பிரளயத்தை உண்டுபண்ண சித்தம் கொண்ட போதும் நோவாவையும் நினைத்துப் பார்த்தார்.** அவனும் அவனது குடும்பத்தாரும் அழிந்து போகாதபடி அவர்களை காப்பாற்றும்படியாக செயல்பட்டார். அவர்களின் நிமித்தமாக **ஒரு பேழையை உண்டாக்கும்படி யோசனை கூறினார்.** தேவனுடைய திட்டத்தின்படி அவர் அவருடைய ஆலோசனையின் படி பேழையைச் செய்தான். அவனும், அவனுடைய குடும்பத்தாரும் பேழையில் இருந்தபடியால் காப்பாற்றப்பட்டார்கள். நோவா உத்தமனாக விளங்கியபடியால் **முழுக் குடும்பமும் தேவனுடைய பாதுகாப்பை பெற்றுக் கொண்டார்கள்.** ஆகவே இன்றும் அவர் நீதிமான்களை மறப்பதேயில்லை. நீங்களும் **நீதிமான்களாக வாழும்போது இயேசுக்கிறிஸ்துவினால் எல்லா வேளைகளிலும் காப்பாற்றப்படுவீர்கள். இன்று ஆசீர்வாதமான நாள்!**

**ஜெபம்**

அன்பான என் தேவனே! நோவா நீதிமானும் உத்தமனுமாயிருந்தபடியால்
தேவரீர் அவருடைய குடும்பத்தை மறவாதபடி காத்துக் கொண்டீர்கள்.
எமக்கும் உங்கள் கண்களில் தயை கிடைக்கும்படியாக நாங்கள்
நீதிமான்களாக வாழ கிருபையருளும்படி ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

“துன்மார்க்கனுடைய வழி கர்த்தருக்கு அருவருப்பானது; நீதியைப் பின்பற்றுகிறவனையோ அவர் நேசிக்கிறார்.” (நீதிமொழிகள் 15:9)

ஜீவ மன்னா

நவம்பர் 30

ஞாயிறு

# பலியைப் பார்க்கிலும் கீழ்படிதலை விரும்பும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

1 தெசலோ: அதி: 04 – 05

**"அதற்குச் சாமுவேல்: கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்."** (1 சாமுவேல் 15:22)

கர்த்தருக்குள் பிரியமான அன்பு தேவ பிள்ளைகளே! கர்த்தர் எம் மத்தியில் செழுமையான நாட்களில் ***எம்மை கடந்து வரப்பண்ணி அவருடைய ஆசியும் அருளும் இன்று உங்களை வந்தடையுமாறு வாழ்த்துகின்றேன்.*** ***ஓசியா 4:6***இல் கர்த்தருடைய வாயின் வார்த்தைகள் உரைக்கின்றது. "என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்" என்பதாக அவரது சத்திய வசனங்களுக்கூடாக பரலோக இராஜ்யத்தைக் குறித்தும், உலக வாழ்வினைக் குறித்தும் அநேக காரியங்களை **தேவன் எமக்கு கற்றுத் தருகிறார்.** நாங்கள் ***அவரது வார்த்தைகளுக்கூடாக இவற்றைக் கற்றறிந்து கொள்வது மிக அவசியமாகும்.***

தேவ பிள்ளைகளே! இன்றைய நாளின் பிரதான வசனம் சாமுவேல் என்னும் ***கர்த்தருடைய தீர்க்கதரிசி அந்நாட்டின் இஸ்ரவேலின் ராஜாவாகிய சவுலை நோக்கி கூறிய வார்த்தைகளாகும்.*** "கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்கு பிரியமாயிருக்குமோ? பலிகளைப் பார்க்கிலும் கீழ்படிதலும் ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்." என்று. இதன்படி பார்த்தால் நாம் ***தேவனுக்கு ஒப்புக் கொடுக்கும் காணிக்கைகள், பலிகளை பார்க்கிலும் தேவன் கீழ்படிதலையே விரும்புகிறார்.*** ஆகையால் நாங்கள் வேதத்தை வாசித்து வசனங்களை அறிந்து கொள்ளாவிடில் நாம் இக்காரியங்களை அறிந்து ***எமது வாழ்வினை நெறிப்படுத்திக் கொள்வது எங்ஙனம்?*** ஆகையால் வேதம் வாசித்து வேத வார்த்தை கேட்டறிந்து எமது ஆத்மீக ஞானத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். பரிசுத்த லூக்கா 2:51ல் அவர் அவர்களுடனே கூடப்போய் நசரேத்தூரில் சேர்த்து அவர்களுக்கு கீழ்படிந்திருந்தார் என எழுதப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! நீங்கள் கீழ்படிவுள்ளவர்களாய் இருங்கள். ஏனெனில் கர்த்தர் உங்களிடம் எதிர்பார்ப்பது இக்கீழ்படிதலையே நீங்கள் தேவ இராஜ்யத்தின் ஊழியங்களுக்காக எவ்வளவு பணம் கொடுத்தாலும். எவ்வளவு முழு உள்ளத்தோடு நீங்கள் காணிக்கைகளை ஒப்புக் கொடுத்தாலும் தேவ ஊழியத்தில் முழு மூச்சுடன் ஈடுபட்டு சேவை புரிந்தாலும் ***உங்களிடம் கீழ்படிந்து செவி கொடுத்து நடக்கும் சுபாவம் இல்லாவிடில் அவர் உங்களில் பிரியப்படமாட்டார்.*** ஆனால் நீங்கள் கீழ்படிந்து அவரின் குரலுக்கு செவிகொடுத்து நடக்கும் போது ***உங்களிடம் பிரியமுள்ளவராயிருந்து உங்கள் வாழ்வை உயர்த்துவார். வெற்றிச் சிறக்கும் நல்நாள்!***

ஜெபம்

என் இயேசுவே! கீழ்படிதலை விரும்புகிறவரே நீர் சிலுவையில் தொங்கி ஜீவனைக் கொடுக்கும் வரையிலும் பிதாவுக்கு கீழ்படிந்து நடக்கும்படி உங்கள் ஆவியிலோ நிரப்பி வழி நடத்துமாறு ஜெபிக்கிறேன்.

~ஆமென்~


வேத வாக்குத்தத்தம்

"அதினால் தேவனுடைய பார்வையிலும் மனுஷருடைய பார்வையிலும் தயையும் நற்புத்தியும் பெறுவாய்."
(நீதிமொழிகள் 3:4)

# நீங்கள் மித மிஞ்சிய ஞானமுள்ளவர்களாகி ஜீவ கிரீடத்தை இழந்து விடாதீர்கள்!



அன்பார்ந்தவர்களே! ஜீவமன்னா தின மஞ்சரி கடந்த 34 வது வெளியீட்டில் அட்டையின் பின் புறத்தில் நீங்கள் மித மிஞ்சிய ஞானமுள்ளவர்களாக இருக்க வேண்டாம். அதுவே உங்களை அழிவுப் பாதையில் கொண்டு செல்லும் என்பதை அறிவீர்களா? எனும் தலையங்கத்தின் கீழ் எழுதப்பட்டிருந்தது. இம்முறையும் ஆத்மீக காரியங்களைக் குறித்து விஷேட செய்தியாக அதையே தொடர்ந்து இப்பக்கத்தில் எழுத முனைந்துள்ளேன்.



தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்து அவரது சொந்த அபிப்பிராயத்தின்படி உலகில் உங்களைத் தேர்ந்தெடுத்து தேவ இராஜ்யத்தின் சொந்தக்காரர் என்று சொல்ல வரப்பிரசாதத்தைப் பெற்றுத் தந்துள்ளார். ஆகையால் நீங்கள் இப் பூமியில் பூமிக்குரியவர்களாக வாழ்ந்தாலும் நீங்கள் பரலோக இராஜ்யத்திற்கு சொந்தமானவராகையால் நீங்கள் இவ்வுலகில் எவ்வண்ணமாக வாழ வேண்டும் என்று தேவ வசனத்திற்கூடாக வழி காட்டுகின்றார்.

**இன்று பெரும்பாலான ஆவிக்குரிய தேவ பிள்ளைகள் பலவிதமான சவால்களுக்கு முகங் கொடுக்கின்றார்கள். அப்படியெனின்:**


**1** பிற மத குருமார்களை இரு கரம் கூப்பி வணங்குவது ஆத்மீக பிள்ளைகளுக்கு தகுதியானதா? அது பிழையானதா? என்று ஒரு கேள்வி எழும்பியுள்ளது.

ஆனாலும் நீங்கள் வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டில் 1 கொரிந்தியர் 9:19-22 வரை வாசித்துப் பாருங்கள். நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும் நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு என்னைத் தானே எல்லோருக்கும் அடிமையாக்கினேன். என்று பவுல் கூறியுள்ளார். இன்னும் யூதரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு யூதருக்கு யூதனைப் போலவும், நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்பட்டவனைப் போலவுமானேன். நியாயப்பிரமாணமில்லாதவர்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு அவர்களுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப் போலவுமானேன். அப்படியிருந்தும் நான் தேவனுக்கு



முன்பாக நியாயப்பிரமாணமில்லாதவனாயிராமல் கிறிஸ்துவின் பிரமாணத்திற்குள்ளவனாய் இருக்கின்றேன். பலவீனரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்குப் பலவீனருக்கு பலவீனனைப் போலானேன். எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன் என்று கூறியுள்ளார். இயேசுவின் சீஷர்கள் பிரதான சீஷனாக இருந்த பவுலடியார் புதிய ஏற்பாட்டில் ஆவியானவரின் ஏவுதலின்படி பல நிருபங்களை எழுதியுள்ளார். இப்படியான வெளிப்பாடுகளின்படி எந்தவிதமான பேதங்களும் இல்லையென்று தெளிவாகின்றது.

**2** சனிக்கிழமை ஓய்வு நாள் என்று சொல்லுவது இன்னுமொரு மாறுபாடான காரியமாகும்.



எங்கள் இயேசுகிறிஸ்து எங்களுக்குக் கொடுத்த பிரதான கட்டளைகள் இரண்டில் இரண்டாவது கட்டளையாக, உன்னைப் போன்று உன் அயலானையும் நேசி என்னும் உன்னதமான கட்டளையைக் கொடுத்துள்ளார். ஆகையால் உலகில் சம்பிரதாய செயல்களுக்கு மேலதிகமாக மனிதன் தன்னைப் போன்ற இன்னுமொரு மனிதனுக்கு அன்பு செய்ய வேண்டும் என்பதை கற்பிக்கின்றார். நீங்கள் பரிசுத்த மாற்கு 2:23-28 வரைக்கும் வாசித்துப் பாருங்கள். ஓய்வு நாளன்று இயேசுகிறிஸ்து தன் சீஷர்களோடு பயிர் வழியே கடந்து போனார். அப்பொழுது சீஷர்கள் கதிர்களை கொய்யத் தொடங்கினார்கள்.

பரிசேயர் அவரை நோக்கி இதோ ஓய்வு நாளில் செய்யத்தகாததை இவர்கள் ஏன் செய்கிறார்கள் என்றார்கள். இயேசுகிறிஸ்து அதற்கு பதிலாக மனுஷன் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை. ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது என்றார். அத்தோடு மனுஷகுமாரன் ஓய்வு நாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார் என்றார். அந்த வசனத்துக்கூடாக சனிக்கிழமை ஓய்வு நாள் என்று கட்டாயமாக்கப்படவில்லை என்பது எமக்கு தெளிவாகின்றது.

2

சர்வாங்கத்தகனப்பலிகளை பார்க்கிலும் கீழ்படிதலே மேலான தொன்றாகும் என கர்த்தர் கூறுகிறார். ஆகையால் எங்கள் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் முழு பெலத்தோடும் தேவனுக்கு அன்பு செய்வதைக் காண்பதே தேவனுக்கு பிரியமாயிருக்கின்றது ஆகையால் முழு உள்ளத்தோடும் தேவனை ஆராதிக்க வேண்டும். பிறமத குருமாருக்கு இரு



கரங்கூப்பி வணங்குவது இலங்கையின் சம்பிரதாயப்படி வணக்கம் சொல்வதற்கு சமனாகின்றது. ஆகையால் தேவ வசனத்திற்கு விரோதமானது தகுதியற்றது எனக் கூற முடியாது. 1யோவான் 4:8இல் அன்பில்லாதவன் தேவனை அறியான் தேவன் அன்பாகவே இருக்கிறார். எனக் கூறப்பட்டுள்ளதால் எல்லா மனிதரையும் கௌரவப்படுத்துவது கீழான செயலல்ல என்பது புலனாகின்றது.

நூதனமான கொள்கைகளைக் கொண்ட கிறிஸ்தவர்கள், எல்லோருக்கும் மேலாக தாங்கள் ஞானவான்கள் என நிலைக்கும் கிறிஸ்தவர்கள் இப்படியான சிறியவைகளைப் பெரிதாகக்கிக் காட்டி, பயனுள்ள ஆத்மீக அறிவைத்தரும் கல்வியை புறக்கணித்து விடுகிறார்கள். ஆனால் நீங்கள் கவனமாக இருங்கள். இப்படியான தேவையற்றவைகளைக் குறித்து சிந்தித்து உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! தேவ வசனங்கள் உங்கள் கால்களுக்கு தீபமும் உங்கள் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்க வேண்டும். நீங்கள் தேவ வசனத்தின்படி மாத்திரம் ஜீவியுங்கள். இயேசு துணை!

## SMS அனுப்புவோர் கவனிக்கவும்



SMS மாத்திரம்
071-0714011

அன்பார்ந்தவர்களே, SMS குறுஞ் செய்தி சேவையை அறிமுகப்படுத்தியதன் பிறகு எங்களுக்கு நீங்கள் பெரும்பாலோனோர் அதற்கு ஆதரவளிப்பதனால் தேவனுக்கு மகிமை உண்டாவதாக!

### கவனிக்க வேண்டியது:

நாங்கள் உங்களுக்கு புதிதாக அறிமுகப்படுத்திய 071-0714011 தொலை பேசி இலக்கத்திற்கு மாத்திரம் நீங்கள் SMS சிறு செய்தி எழுதி அனுப்புங்கள் (இந்த இலக்கத்தில் உங்களுக்கு தொலைபேசி அழைப்பைப் பெற்றுக் கொள்ள முடியாது.)

தொலைபேசி இல: 071-922929 க்கு உங்கள் SMS குறுஞ் செய்தியை அனுப்பாதீர்கள். அதில் தொலைபேசி அழைப்புக்கள் எந்நேரமும் வந்துக் கொண்டிருப்பதனால் SMS செய்திகளை பரிசீலிப்பதில்லை. ஆகையால் உங்கள் விலைமதிப்பான நேரங்களை வீண் விரயமாக்காதீர்கள்.

## சந்தோஷமாக முழுமனதுடன் கொடுப்பவர்கள் பேரில் பிரியமாயிருக்கும் தேவன்!

அன்பார்ந்தவர்களே ஜீவ மன்னா வாசகக் கட்டணங்கள், சந்தோஷ கொடுப்பனவுகள், காணிக்கைகள், காசுக்கட்டளைகளை எமக்கு அனுப்பி தேவ இராஜ்ஜியத்தின் காரியங்களை முன்னோக்கிக் கொண்டு செல்ல ஒத்தாசை நல்குங்கள்.



போதகர் ஏ.ஜே.ஜோசப்

- உங்கள் காசுக் கட்டளைகள் கிராண்டபாஸ் தபால் காரியாலயம் என்று குறிப்பிட்டு போதகர் ஏ.ஜே.ஜோசப் என்னும் பெயருக்கு அனுப்புங்கள்.
- போதகர் ஏ.ஜே.ஜோசப் எனும் பெயரைக் குறிப்பிட்டு கொமர்ஷல் வங்கி கிராண்ட்பாஸ் கிளை 8076982701 என்ற கணக்கு இலக்கத்திற்கு வைப்பிலிடுமாறு உங்களிடம் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம்.
விலாசத்தை அனுப்பவும்

R/N:- QD/38/NEWS/2014

## இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்

இல 33/1, புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14.

☎ 011-2334865 ✆ 071-4922929

arulandu.joseph@gmail.com www.jesusnf.org

இல 33:1 புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14, ஜீவ மன்னா குட் நிவ்ஸ் பிரின்டஸ் அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.